SLIDA

வருடாந்த அறிக்கை - 2017

SLIDA

பொருளடக்கம்

I ஆம் பகுதி 5

எம்மைப் பற்றி 5

1.1 இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் (SLIDA) 5

1.2 பணிப்பாளர் நாயகத்தின் செய்தி 6

1.3 இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் மூலோபாய அணுகுமுறைகள் 7

1.4 நிர்வாகச் சபை 8

1.5 சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் விரிவுரையாளர் குழாம் 10

1.6 செயற்பாட்டு மற்றும் நிறுவன கட்டமைப்பு மற்றும் ஆளனிப் பதவிகள் 11

1.6.1 இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் செயற்பாட்டுக் கட்டமைப்பு 11

1.6.2 இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் அமைப்புசார் கட்டமைப்பு 12

1.6.3 பதவிநிலை தரத்துடைய பதவிகள் 13

II ஆம் பகுதி 12

2017 ஆம் ஆண்டினுள் பூரணப்படுத்திய பணிகள் 14

2. கற்றல் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் 14

2.1 சேவைப் புதுமுகப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 15

2.2 சகல நாடளாவிய சேவைகளுக்குமான கட்டாய கற்றல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள். 17

2.3 டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்கள் 21

2.4 குறுகிய கால கற்றல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் 22

2.5 தனிப்பயனாக்கப்பட்ட கற்றல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் 24

2.6 பொது மாநாடுகள் 24

2.7 வெளிநாட்டுப் பயிற்சி நிறுவனங்களுடன் பங்குதார்ர்களாக கூட்டிணைந்து நடாத்தப்படும் கற்றல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் 22

2.8 அலுவலர்களுக்கான ஒருங்கிணைப்பு செய்யப்பட்ட வெளிநாட்டு பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள். 31

2.9 வெளிநாட்டவர்கள் நிமித்தம் நடாத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 33

3. **பட்டப்பின் படிப்பிற்கான பாடசாலை** 34

4. **முகாமைத்துவ ஆலோசனைகள்** 36

5. **2017 ஆம் ஆண்டினுள் நடாத்தப்பட்ட பரீட்சைகள்** 37

6. **பொது நிர்வாகம்** 37

6.1 மனித வள முகாமைத்துவம் 37

6.2 கணிப்பியல் திட்ட முகாமைத்துவம் 38

நிறுவகத்தின் கீழ்க் காட்டப்பட்டுள்ள இடங்கள் மீளாய்வு ஆண்டினுள் மீள தயார்படுத்தப்பட்டுள்ளது.. 38

6.3 உள்ளார்ந்த செயலாக்கத்தினை விருத்தி செய்தல் 38

6.4 தகவல் தொழில்நுட்பப் பிரிவின் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல். 38

6.5 கணக்காய்வு வினவல்கள் - 38

7. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் மூலம் நடாத்தப்படும் விசேட செயற்திட்டங்கள் 39

7.1 மோதல்களினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சமுதாய அபிவிருத்திப் பணிகளில் முன்னணி வகிக்கும் அலுவலர்களுக்கு JICA வின் மூலம் நிதியுதவி வழங்குதல். FORWARD செயற்திட்டம்) 39

7.2 ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களிற்கான உதவிகள் 40

8. விசேட நிகழ்வுகள் 41

8.1 35 வருட சிறப்பு வாய்ந்த சேவைகளைக் கொண்டாடுதல் 41

8.2 அதன் பசுமைச் செயற்திட்டம் (GREEEN Project) இற்கான தேசிய பசுமை எரிசக்திக் கின்னத்தினை வெற்றியீட்டல். (Government's Renewable Energy and Energy Efficiency Networking Project) 2

8.3 இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் கல்லூரிக் கட்டிடத் தொகுதியினை திறத்தல் 43

8.4 திரசர லங்கா கண்காட்சி 43

8.5 இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திற்கு தெற்காசியாவின் முகாமைத்துவப் பயிற்சி நிறுவனத் தலைவர்களின் வருகை 44

8.6 சீனாவின் Huazhong தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திற்கான (HUST) சுற்றுலா - 44

8.7 சீனாவின் ஜீனான் பல்கலைக்கழகத்தில் இருந்து ஒரு குழுவின் வருகை 45

8.8. வெள்ள நிவாரணம் 45

8.9 மரம் நடுகை 46

8.10 இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணியாட் தொகுதியினருக்கான வெளியே அமைந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 46

8.11 உடற்பயிற்சி தினம் 47

8.12 வெசாக் கொண்டாட்டங்கள் 47

பகுதி III

புதிய முயற்சிகள் - 2017 48

9.1 மூலோபாய திட்டம் 2017-2021 48

9.2 புதிய டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்கள்.. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகம் செய்தல் 48

9.2.1 அரச பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நிர்வாகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா 48

9.2.2 தேசிய பாதுகாப்பு மற்றும் உலகளாவிய நிர்வாகம் (National Security and Global Governance) 49

9.2.3 இனத்தைக் கட்டியெழுப்பல் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு (Nation- Building and Social Integration) 49

9.2.4 வலுவாதார அபிவிருத்தி இலக்குகள், திறந்த அரச பங்கேற்பு மற்றும் பாலின உணர்ச்சிகள் கொண்ட அரச அலுவலர்கள் 49

9.2.5 ஓய்வூதிய கோப்புக்களைத் தயாரித்தல் தொடர்பான பயிற்சி 49

9.2.6 சிரேஷ்ட முகாமையாளர்களுக்கான Toast Masters கழகங்கள் 49

9.2.7 தூரநோக்கினை ஏற்படுத்திக் கொள்வதற்கான விளையாட்டின் அடிப்படையில் அமைந்த பயிற்சிகள் 50

9.2.8 நடமாடும் பயிற்சிப் பாடநெறிகள் 51

9.2.9 ஓய்வூதியக் கோப்புக்களைத் தயாரித்தல் தொடர்பான பயிற்சி 51

9.3 ஆராய்ச்சிகளின் துவக்கம் 51

9.3.1 "சந்தாரணீ ஆராய்ச்சி மையம்" த்தினை நிறுவுதல் 51

9.3.2 ஆராய்ச்சி வெளியீடுகள் 51

9.3.3 இலங்கை ஆராய்ச்சியாளர்களுக்கு அவுஸ்திரேலியா அதி உயர் புலமைப் பரிசில் (AAF) வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் 52

9.4 அரச துறை அலுவலர்களுக்கான வழிகாட்டல் / ஆலோசனை சேவைகளை துவங்குதல் 52

9.5 ISO தர நிலைச் சான்றிதழினைப் (ISO Quality Standards) பெற்றுக் கொள்வதற்கான துவக்கங்கள் 53

9.6 இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் எண்முறை அடிப்படையிலான அரச மனித வளத் திறன் விருத்தி மேம்பாட்டுச் செயற்திட்டத்தினை ஆரம்பித்தல் 53

IV ஆம் பகுதி

தற்கால சவால்கள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் 54

10.1 தற்கால சவால்கள் 54

10.2 எதிர்காலத் திட்டம் 54

V ஆம் பகுதி 22

Vi ஆம் பகுதி 44

கணக்காய்வாளரின் அறிக்கை மற்றும் மறுமொழிகள் 60

கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 60

SLIDA

1 ஆம் பகுதி

எம்மைப் பற்றி

1.1 இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் (SLIDA)

அரசாங்க நிர்வாக விடயப் பொறுப்பு அமைச்சின் கீழ் இஸ்தாபிக்கப்பட்ட நிறுவகமாக விளங்கும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் 1982 ஆம் ஆண்டின் போது 1982 இலக்கம் 9 இனைக் கொண்ட சட்டத்தினால் நிறுவப்பட்டது. அது அரசப் பிரிவில் நிறைவேற்று அதிகாரிகளின் திறன் விருத்தி மற்றும் தொழில்முறை வளர்ச்சிகள் தொடர்பான பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படுள்ள தேசிய மட்டத்திலான முன்னணி நிறுவனமாகும்.

பொதுமக்களின் நலன் கருதி அமைக்கப்பட்ட சுய சட்டகப் பெறுமதி மிக்க அரச துறையினுள் காணப்படும் அலுவலர்களுக்கு பயிற்சியளித்தல், அரச துறை நிறுவனங்களுக்கு அவசியப்படும் முகாமைத்துவ ஆலோசனைச் சேவைகளை வழங்குதல் மற்றும் அரச துறை அலுவலர்களின் ஆராய்ச்சிக்கான ஊக்குவிப்புக்களை வழங்குதல் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பிரதான பணிகளாகும்.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்துக்கு முதுகலைமானி நிலையிலான பட்டத்தினை வழங்கும் இயலுமையை இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ளது. நிறுவகத்தினால் பட்டப் பின் படிப்பினை இப் பாடசாலையினால் வழங்குவதோடு அரசாங்க முகாமைத்துவம் தொடர்பான முதுகலைமானிப் பட்டம் மற்றும் பட்டப் பின் டிப்ளோமாவினையும் வழங்குகின்றது. அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதான நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் ஏனைய தரப்பினர்களையும் ஒன்றாக இணைத்து தங்களது முகாமையாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பெறுமானங்களைக் கொண்டு பங்களிப்பினை வேண்டி நிற்கும் நிலைமை விருத்தியடையச் செய்யும் பின்னணியில் தற்காலத்தில் வேகமாக மாற்றமுறும் மற்றும் சவாலாக அமைந்துள்ள அரசாங்க முகாமைத்துவ சூழலின் தேவைகளை நிறைவேற்றும் நோக்கத்தில் இந் நிறுவகம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் நிர்வாகச் சபை அரசாங்க நிர்வாக விடயப் பொறுப்பு அமைச்சரின் நேரடி வழிகாட்டலின் கீழ் நிறுவகத்தின் கொள்கைகளைத் தீர்மானிப்பது தொடர்பாக பொறுப்புக் கூற கடமைப்பட்டுள்ளது.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் நடாத்தப்படும் பயிற்சி மற்றும் ஆராய்ச்சித் துறைகளுக்கு ஒத்துழைப்பு நல்கும் வகையில் வசதிகளை வழங்கிவரும் லண்டன் சிவில் சேவைக் கல்லூரி, சிங்கப்பூர் சிவில் சேவைக் கல்லூரி, சீனாவின் பெய்ஜிங் வெளிநாட்டு ஆய்விற்கான பல்கலைக்கழகம், நிர்வாகம் தொடர்பான இந்தியாவின் லால் பஹதூர் சாஸ்திரி தேசிய அகாடமி, அவுஸ்திரேலியாவின் மொனர்' பல்கலைக்கழகம், மாலைதீவின் சிவில் சேவைப் பயிற்சி நிறுவனம், சீனாவின் 'ஹுஜோங் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் போன்ற வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்கள் சிலவற்றுடன் வலைப்பின்னலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இரு தரப்புப் பயிற்சிகள் மற்றும் ஆராய்ச்சிகளின் ஒத்துழைப்பினை விருத்தி செய்யும் நோக்குடன் 2017 ஆம் ஆண்டின் போது இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் தென் கொரியாவில் அரசக் கொள்கை மற்றும் முகாமைத்துவம் தொடர்பான கேடீஜ அகாடமியுடன் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திட்டுள்ளது.

கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளினுள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் அறிவு மேம்பாடு, திறன் விருத்தி, நிறுவன வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சிகள் உட்பட பரந்துபட்ட சேவையினை வழங்குவதில் ஈடுபட்டு பலமிக்க நிறுவகமாக மாறியுள்ளது.

1.2 பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

2017 ஆம் ஆண்டினுள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் செயற்திறன் தொடர்பாக இம் மீளாய்வில் முன்வைக்கக் கிடைத்தனையிட்டு நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் "வித்யா உதாதி வினயங்" எனும் கருப்பொருள் மற்றும் ஆசியாவின் அரச துறைக் கற்கை மற்றும் அபிவிருத்தி தொடர்பாக அதி சிறந்த நிலையமாக மாற்றமுறல் எனும் தொலைநோக்குடன் இணைந்து குறித்த ஆண்டினுள் சிறப்பித்துக் காட்டப்படும் மற்றும் உயர் மட்டத்திலமைந்த செயற்திறனை அடைந்து கொள்வதற்குரிய இயலுமை எமக்கு காணப்படுகின்றது.

நிறுவனத்தினால் சேவைப் புதுமுகப் பயிற்சிகள் 09 இனை நாடளாவிய ரீதியிலான சேவையின் பொருட்டு நடாத்தப்பட்டுள்ளதோடு அதில் 786 அலுவலர்களும் பங்குபற்றினார்கள். அங்கு பிரதான அலுவலர்களினால் சிறப்பு விருந்தினர் விரிவுரைகளும் நடாத்தப்பட்டன.

சிரே'ட அரச அலுவலர்களின் இயலளவினைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டமொன்றாக விளங்கிய மலேசியாவிற்கான சுற்றுலா உள்ளடக்கப்படுவதோடு, அதில் 153 அலுவலர்கள் கலந்தும் கொண்டார்கள். அத்தோடு வருடத்தினுள் நடாத்தப்பட்ட டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 8 ஆகும். அதன் போது ஆங்கில டிப்ளோமா பாடநெறிக்காக 321 பேர் கலந்து கொண்டதோடு மொத்தமாக 540 பேர் பங்குபற்றி சிறப்பித்தார்கள். மேலும் குறுகிய கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 35 இனை நடாத்தியுள்ளதோடு அதில் 767 அலுவலர்கள் பயிற்சியினைப் பெற்றுக் கொண்டார்கள். அவ்வாறே பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 07 இன் போது 117 பேர் கலந்து கொண்டதோடு அவர்களுக்கான தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய நடுத்தர மட்டத்திலான தொழிற் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும் நடைபெற்றன.

மீளாய்வு ஆண்டினுள் வெளிநாட்டுப் பயிற்சிக்காக நிறுவன அலுவலர்கள் மற்றும் வெளிநாட்டவர்களுக்காக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் ஒருங்கிணைந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலதிகமாக ஒரு சில செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகளும் நடாத்தப்பட்டன.

2017 ஆம் ஆண்டின் ஆரம்பத்தின் போது பட்டப் பின் கற்கைப் பாடசாலையின் மூலம் பட்டப் பின் பட்டத்தினைப் பெற்ற 224 மாணவர்களின் பங்குபற்றலினைக் கொண்டு அரசாங்க முகாமைத்துவம் தொடர்பான முதுகலைமானிப் பட்டத்தினைப் பூர்த்தி செய்த மூன்று குழுக்கள் வழிநடாத்தப்பட்டார்கள். மேலும் பட்டப்படிப்பிற்கான பாடசாலையின் மூலம் மற்றொரு நாட்டுக்கான கல்விச் சுற்றுலாவாக சீனாவின் ஹாவஸ்ட் பல்கலைக்கழகத்துக்கும் சென்றார்கள். "ஆராய்ச்சிகளைப் பிரயோகத்தில் கொள்ளல்" "சாட்சியின் அடிப்படையில் கொள்கைத் தொகுப்பு நிகழ்ச்சித்திட்டம்" எனும் கருப்பொருளின் கீழ் 2017 ஆம் ஆண்டினுள் பட்டப் படிப்புப் பாடசாலையின் மூலம் வருடாந்தம் ஆராய்ச்சி மாநாடொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டது.

2017 ஆம் ஆண்டினுள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் பணியாட்தொகுதியினர், ஒழுங்குவிதிகள் தொடர்பான மீளாய்வு, கையேடுகள் மற்றும் வழிகாட்டிகளைத் தயாரிப்பதற்கான ஆலோசனைச் சேவைகளும் வழங்கப்பட்டன. நிறுவனத்தின் பரீட்சைப் பிரிவினால் வெளிவாரி அமைப்புக்களுக்கான பரீட்சைகள் 98 உம் உள்ளக நிகழ்ச்சித்திட்டங்களுக்கான பரீட்சைகள் 33 உம் நட்டாத்தப்பட்டன.

எதிர்காலத்தில் இலங்கை ஆசியாவின் ஓர் அதிசயமாக மாற்றும் எதிர்பார்ப்பினை அடைந்து கொள்ளும் வகையில் இலக்காக அமைந்துள்ள திறமை, வினைத்திறன் மற்றும் அர்ப்பணிக்கப்பட்ட அரச சேவையினை வழங்குவதற்கு ஒத்துழைக்கும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் தேசத்திற்கு முப்பத்தைந்து வருடங்கள் அளப்பரிய சேவையினை வழங்கியுள்ளது.

வசந்த பெரேரா
பணிப்பாளர் நாயகம்

1.3 இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் மூலோபாய அணுகுமுறைகள்

Vision

"ஆசியாவின் அரச துறையில் கற்றல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான அதிசிறந்த நிலையமாக மாற வேண்டும்" என்பதே இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் தொலைநோக்காகக் காணப்படுகின்றது.

Mission

கற்றல் மற்றும் அபிவிருத்தி, ஆலோசனைச் சேவைகள் மற்றும் ஆராய்ச்சிகள் மூலம் புத்தாக்கம் கொண்ட, எதிர்கால நோக்கு மற்றும் குடிமக்களை மையமாகக் கொண்ட சேவையினை தொடர்ந்தேர்ச்சியாக விருத்தி செய்யும் வகையில் வசதிகளை வழங்குதல்.

மூலோபாய இலக்குகள் -

- வினைத்திறன் மிக்க மற்றும் உற்பத்தித்திறன் வாய்ந்த அரச சேவையினை நிறுவும் வகையில் தேசிய அபிவிருத்திற்கான இலக்கிற்கு பங்களிப்பினை வழங்குதல்.
- தேசிய மட்டத்திலான கொள்கை அபிவிருத்திற்கு பங்களிக்கும் வகையில் முன்னணி வகிபாகத்தினை வகித்தல்.
- சுய கற்றல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் பொருட்டு அதிகமான கேள்விகளை உருவாக்கும் வகையில் அதன் பங்குதாரர்களினுள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் தொடர்பான நேர்மறையான படத்தினைக் கட்டியெழுப்புதல்.
- இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவினுள் அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அபிவிருத்தியின் பொருட்டாக அமையும் ஒத்துழைப்பு வழங்கும் மையமாக விளங்குதல்.

முக்கிய பணிகள் -

- கற்கை மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக அரச துறையில் உள்ள முகாமைத்துவ பணியாட்தொகுதியினரின் இயலளவினை கட்டியெழுப்புதல்.
- முதுகலைமானிப் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் அரச துறை அலுவலர்களின் அறிவினை விருத்தி செய்தல்.
- அரச கொள்கை மற்றும் முகாமைத்துவத்துக்கு உரித்தான இலக்குடைய ஆராய்ச்சிக் கற்கையினை உள்ளடக்கிய களஞ்சியமொன்றினை விருத்தி செய்தல்.
- அரச துறை நிறுவனங்கள் மற்றும் அரசுக்கு உரித்தான தொழில்முனைவோர் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனை விருத்தி செய்யும் வகையில் அமைப்பு ரீதியான அபிவிருத்திச் சேவைகளை நடாத்திச் செய்தல்.
- அரச துறைக்கான வினைத்திறன் காண் தடைப் பரீட்சைகள் மற்றும் மொழித் தேர்ச்சிப் பரீட்சைகளை நடாத்துதல்.

எமது பெறுமானங்கள் -

- சிறப்புத் தன்மை, அர்ப்பணிப்பு, பன்முகத்தன்மை, பொறுப்பு, நிலைத்திருக்கும் தன்மை

மூலோபாய நோக்கம் -

- "மிகச் சிறந்த நாளை நாளிற்காக இலங்கையை உருவாக்கும் வகையில் அரச துறையினை பலப்படுத்துதல்"

1.4 நிர்வாகச் சபை

அரசாங்க நிர்வாக அமைச்சரினால் 1982 இலக்கம் 09 இனைக் கொண்ட இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகச் சட்டத்தின் 6(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பின்வரும் நபர்கள் 2017 ஆம் ஆண்டிற்கான நிர்வாகச் சபை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.



திரு. ஜே.ஜே. ரத்னசிரி

உறுப்பினர்

செயலாளர் அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,

சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.



திரு. சமன் ஏக்கநாயக்க
உறுப்பினர்
பிரதம மந்திரியின் செயலாளர்
பிரதமர் அலுவலகம்,
இல. 58, ஆர்னஸ்ட் த சில்வா மாவத்தை,
கொழும்பு 07.



திரு. நீல் த சில்வா

உறுப்பினர்

செயலாளர்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு, சுதந்திர சதுக்கம்,

கொழும்பு 07.



திரு. டீ.சீ. திஸாநாயக்க
உறுப்பினர்
செயலாளர், உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, இல.216, மக நெகும மஹ மெதுர டென்ஸில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல.



திரு. எச்.டீ. கமல் பத்மசிரி
உறுப்பினர்
செயலாளர், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
இல. 330, கலா. கோல்வின் ஆர் த சில்வா மாவத்தை,
(யூனியன் பிளேஸ்),
கொழும்பு 02.



திரு. பி.பீ.எஸ்.சீ. நோனிஸ்
உறுப்பினர்,
கட்டுப்பாட்டு ஆணையாளர்,
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,
பொதுச் செயலகம்,
கொழும்பு 01.



திரு. சாரன் அமரதுங்க
உறுப்பினர்,
முகாமைத்துவ ஆலாசகர்,
இல. 10B,
கவர் வீதி,
கொழும்பு 05.



திரு. டீ.ஏ.விஜித் மஹேந்திர ரத்னசேகர
உறுப்பினர்,
1/31ஏ, கந்தேவத்த டெரஸ்,
ஓப் பூர்வாராம பாதை,
நுகேகொடை.



திரு. கே.டீ.டீ.கே. தி அப்ரூ
உறுப்பினர்,
இல. 699/6,
ஜோனெக் வத்த பாதை,
தளுகமை,
களணி.



திரு. எஸ். சுரேஷ் சீ. பிரனாந்து
உறுப்பினர்,
இல. 3 பீ,
ஹலுதாகொடை வீதி,
ஓப் டெம்பல்ஸ் பாதை,
கல்கிஸ்ஸ.



திருமதி. வசந்தா பெரேரா

உறுப்பினர்,

பணிப்பாளர் நாயகம்,
இ.அ.நி.நி,

நிர்வாகச் சபையின் அங்கத்தவர்

1.5 சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் விரிவுரையாளர் குழாம்

திருமதி. வசந்தா பெரேரா

பணிப்பாளர் நாயகம்

இலங்கை நிருவாக சேவை விசேட வகுப்பு

விஞ்ஞான முதுமானி, தொழில் நுட்ப பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா

பட்டபடிப்பின் பின் டிப்ளோமா, பொருளாதார அபிவிருத்தி, கொழும்பு பல்கலைக்கழகம்

பட்டப்படிப்பின் பின் டிப்ளோமா, பி.ஐ.எம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

விஞ்ஞான இளமானி, பேராதனை பல்கலைக்கழகம், இலங்கை.

திருமதி, கே.எம்.எஸ்.டி. ஜயசேகர

மேலதிக பணிப்பாளர் நாயகம் (பயிற்சி மற்றும் கற்கைகள்)

இலங்கை நிர்வாக சேவை விசேட வகுப்பு

விஞ்ஞான இளமாணி (உயிரியல்) முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா,

அரச நிர்வாகம் பற்றிய பட்டப்பின் படிப்பு பட்டம் (ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்) மூலோபாய மனிதவள முகாமைத்துவம் பற்றிய பட்டப் பின் படிப்பு (விக்டோரியா பல்கலைக்கழகம் அவுஸ்திரேலியா)

ஆர்வம் காட்டும் விசேட துறைகள் - பொது முகாமைத்துவம் மற்றும் மனிதவள முகாமைத்துவம், பயிற்சி மற்றும் கற்கை உத்திகள், உற்பத்தித்திறனை விருத்தி செய்தல். தொடர்பாடல் மற்றும் நுகர்வோர் தொடர்பு முகாமைத்துவம், காணி நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி நிர்வாகம்

சிரேஷ்ட ஆலோசகர்கள்

திருமதி. என். ஜே. ஜயசுந்தர

சிரேஷ்ட ஆலோசகர்

விஞ்ஞான இளமாணி (சிறப்பு) விவசாயம் பேராதனைப் பல்கலைக்கழகம்,

விஞ்ஞான முதுமாணி (சூழல் பொருளியல்) PGIA பேராதனை, சூழல் முகாமைத்துவம் தொடர்பான சான்றிதழ் பாடநெறி (CDG ஜேர்மன்)

திரு. டபிள்யு.எம்.எம்.ஜி.டி. விஜேகோன்

சிரேஷ்ட ஆலோசகர்

கலைமாணி (சிறப்பு) புவியியல் - கொழும்பு பல்கலைக்கழகம்,

விஞ்ஞான முதுமாணி (நகர சூழல் முகாமைத்துவம்)

AIT தாய்லாந்து, கருத்திட்ட முகாமைத்துவம் பற்றிய ஆலோசகர், கழிவு முகாமைத்துவம், சூழல் முகாமைத்துவம். ஆய்வு முறையியல் மற்றும் நகர அபிவிருத்தி

திரு. ஏ. லொகுகமகே

சிரேஷ்ட ஆலோசகர்

முதுமாணி (நிதிப்பொருளியல்) கொழும்பு பல்கலைக்கழகம்

புட்டப்பின் படிப்பு டிப்ளோமா (பொருளாதார அபிவிருத்தி)

புட்டப்பின் படிப்பு டிப்ளோமா (கூட்டுத்தாபன மற்றும் மூலோபாய நிதி)

HNDA,DPFM, DIPPCA தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா

MAAT, பெறுகை முகாமைத்துவம் மற்றும் அரச நிதி முகாமைத்துவம் ஆர்வம் காட்டும் விசேட துறைகள் அரசாங்க பெறுகைகள் வழங்கல் சேவை அரச நிதி நிதிக் கொள்கைகள் மேற்பார்வை கொள்கைகள் மற்றும் கருத்திட்ட நிதி.

பேராசிரியர். எஸ்.ஆர்.எஸ்.என். சுதசிங்க

சிரேஷ்ட ஆலோசகர்

அபிவிருத்தி நிர்வாகம் தொடர்பான கலாநிதிப்பட்டம் (அரச பொள்கை முகாமைத்துவம் பற்றிய சிறப்பு) பொருளியல் முதுமாணிப் பட்டம். கொழும்பு பல்கலைக்கழகம். பொருளாதார அபிவிருத்தி பட்டபின் படிப்பு டிப்ளோமா (கொழும்பு பல்கலைக்கழகம்). பொருளியல் தொடர்பான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (கொழும்பு பல்கலைக்கழகம்). கலைமாணி (சிறப்பு) ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் வெளிவாரி பேராசிரியர் முகாமைத்துவம் மற்றும் விஞ்ஞான பல்கலைக்கழகம் மலேசியா பட்டப் பின் கலாநிதிப் பட்ட ஆராய்ச்சியாளர் தெசிய அபிவிருததி நிர்வாக நிறுவனம் (தாய்லாந்து)

திரு. ஏ.பீ.எம். அஷ்ரப்

சிரேஷ்ட ஆலோசகர்

கலைமானி மனிதவள முகாமைத்துவம் பற்றிய வியாபார நிர்வாகம் முதுமாணிப்பட்ம், ஆர்வம் காட்டும் துறைகள் அரச நிர்வாகம் நல்லாட்சி மனிதவள முகாமைத்துவம் நிறுவன அபிவிருத்தி, அரச தனியார் கூட்டுடமை, பங்கேற்பு அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி பொருளியல் மற்றும் பங்களிப்பு திட்டங்கள்

திருமதி. ரோஷினி திஸாநாயக்க - சட்டத்தரணி

சத்தியப்பரமாண ஆணையாளர்

சிரேஷ்ட ஆலோசகர்

இலங்கை நிர்வாக சேவை 1

விஞ்ஞானமாணி (சிறப்பு), சட்டாணி, அரச முகாமைத்துவம் பற்றிய முதுமாணிப் பட்டம் (கருத்திட்ட முகாமைத்துவம்)

சர்வதேச உறவுகள் பற்றிய பட்டப்பின் டிப்ளோமா டிபிபிசிஏ, சட்டம், அரச நிர்வாக சட்டம், தொழிலாளர் சட்டம், குற்றவியல் சட்டம், வர்த்தகச் சட்டம், சாட்சியங்கள் கட்டளைச்சட்டம், சிவில் வழக்கு கட்டளைகள், அரச பாதுகாப்பு மற்றும் குற்றத் தடுப்பு, குடிவரவு குடியகழ்வுச் சட்டம், பிரஜைகள் சட்டம், சர்வதேச சட்டம், கடல் சட்டம், சர்வதேச அரசியல்.

திரு. ஜே.எஸ்.பி. பியசேன

சிரேஷ்ட ஆலோசகர்

இலங்கை நிர்வாக சேவை 1

கலை முதுமானி சமூகவியல் களனி பல்பலைக்கழகம்

விஞ்ஞான இளமானி,˙ ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

செல்வி. டீ. அபயவர்தன்

சிரேஷ்ட ஆலோசகர்

இலங்கை அபிவிருத்தி நிர்வாக சேவை 1

சர்வதேச தொடர்பு முதுமானி- யப்பான்

வியாபார நிர்வாகம் முதுமானி பேராதனைப் பல்கலைக்கழகம்

இளமானி, விலங்கியல் பேராதனைப் பல்கலைக்கழகம்

திரு. கே. ஆர். கங்காதார

சிரேஷ்ட ஆலோசகர்

இலங்கை அபிவிருத்தி நிர்வாக சேவை 1

சர்வதேச அபிவிருத்தி பொருளாதார முதுமானி, அவுஸ்திரேலியா

இளமானி வளவியல், பேராதனைப் பல்கலைக்கழகம்

திரு. என். ஐ. லியனகே

சிரேஷ்ட ஆலோசகர்

இலங்கை அபிவிருத்தி நிர்வாக சேவை 1

எம்.பி.பி.எம். (மெல்போன்). அவுஸ்திரேலியா

பி.ஜி.டி. அபிவிருத்தி திட்டமிடல், றுகுணு பல்கலைக்கழகம்

இளமானி பொருளியல்

திரு. எஸ்.எம்.எஸ்.ஏ. பண்டார

ஆலோசகர் ஐ

விஞ்ஞான இளமாணி (ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்)

விஞ்ஞான முதுமாணி - வன விஞ்ஞானம் (ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்) தகவல் தொழில்நுட்பம் (மொரட்டுவை பல்கலைக்கழகம்) தகவல் முகாமைத்துவம் பற்றிய சான்றிதழ் பாடநெறி, இலத்திரனியல் கட்டுப்பாடு பற்றிய சான்றிதழ் பாடநெறி Certificate in Local Area Network எட்வான்ஸ் ஜாவா எப்லிகேஷ் பற்றிய சான்றிதழ் பாடநெறி (Java E) கொழும்பு பல்கலைக்கழகம்.

திருமதி. எம். ஆர். வக்கும்புர

ஆலோசகர்

சர்வதேச தொடர்புகள் பற்றிய கலைமாணிப் பட்டம் (சிறப்பு) (கொழும்பு பல்கலைக்கழகம்)

சமாதானம் மற்றும் பிணக்கு கற்கைகள் பற்றிய தத்துவமாணிப் பட்டம் (ஒஸ்லோ பல்கலைக்கழகம் - நோர்வே)

திரு. எம். பெரேரா

இணை ஆலோசகர்

விஞ்ஞான முதுமாணி, மொரட்டுவை பல்கலைக்கழகம்

இளமாணி கணணி துறை, கொழும்பு பல்கலைக்கழகம்

நிருவாக, நிதி, தகவல் மற்றும் சேவைகள் பிரிவு

திரு. கே. பி. சந்தித்

(இலங்கை நிருவாக சேவை 1)

பணிப்பாளர், நிர்வாகம்

வியாபார முகாமைத்துவம் தொடர்பான முதுமாணிப் பட்டம் (ரஜரட்ட பல்கலைக்கழகம்) விஞ்ஞான முதுமாணிப் பட்டம் (பேராதனைப் பல்கலைக்கழகம்) கல்வி டிப்ளோமா நிலைபேறான அபிவிருத்திக்கான கற்கை பற்றிய டிப்ளோமா (உப்பசலா பல்கலைக்கழகம் சுவீடன்) அரச முகாமைத்துவம் பற்றிய டிப்ளோமா (சுவீடன்)

திருமதி. ஆர். ஏ. எஸ். பி. ரணவீர

பதிவாளர்

விஞ்ஞான மாணி (சிறப்பு) பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (இன்ட் மெதடிக்ஸ்)

திருமதி. திலினி கரஸ்நாகொட

(இலங்கை நிருவாக சேவை ஐஐஐ)

ஊதவிப் பணிப்பாளர் (பரீட்சைகள்)

உயிரியல் பற்றிய முதுமாணிப் பட்டம், சேவை முகாமைத்துவம் பற்றிய விஞ்ஞான முதுமாணி, அரச நிருவாகம் பற்றிய டிப்ளோமா, அரச துறை சட்டங்கள் மற்றும் கட்டணைகள், ஒழுக்காற்று நடைமுறைகள், அலுவலக முகாமைத்துவம் மற்றும் மனிதவள முகாமைத்துவம் ஆகிய துறைகளில் ஆர்வம் உள்ளவர்.

திருமதி. ரி.டி. நாரன்கொட

உள்ளக கணக்காய்வாளர்

பீபீ. ஏம்ரீஜீ மனிதவள முகாமைத்துவம் (சிறப்பு) பீஎச்டி (வியாபார மற்றும் நிதி முகாமைத்துவம்) (ICAS), பொருளியல் (முதுமாணி) (களணிப் பல்கலைக்கழகம்)

திருமதி. பீ.ஏ.பி. பாலசூரிய

நூலகர்

நூலக மற்றும் வெளியீடுகள் பற்றிய (முதுமாணிப் பட்டம்) கலைமாணிப் பட்டம் - களணிப் பல்கலைக்கழகம் - முகாமைத்துவ டிப்ளோமா (இலங்கை திறந்த பல்கலைக்கழகம்) கல்வி பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பேராதனைப் பல்கலைக்கழகம் சீஒஎல்ஏ (எஸ்எல்எல்ஏ) ஏஎல்ஏ (இலங்கை) பட்டய நூலகர்

திருமதி. எஸ்.எல்.ஐ. சமரவிக்ரம

உதவி பதிவாளர்

கலைத்துறை முதுமாணி (பொருளாதாரம்) களனி பல்கலைக்கழகம்

விஞ்ஞான இளமானி (மனித வளம்) ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்.

திரு. எஸ் ஏ. மனம்பேரி

இலங்கை நிருவாக சேவை


மொழி பரிவர்தனை அலுவலகர்

விஞ்ஞான முதுமானி, மன்செஸ்டர்


பட்டபின் படிப்பு டிப்ளோமா, ஐக்கிய அமெரிக்கா

1.6 செயற்பாட்டு மற்றும் நிறுவன கட்டமைப்பு மற்றும் ஆளனிப் பதவிகள்

1.6.1 இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் செயற்பாட்டுக் கட்டமைப்பு



1.6.2 இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் அமைப்புசார் கட்டமைப்பு



1.6.3 பதவிநிலைத் தரத்துடைய பதவிகள்

2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதியினர் மற்றும் பதவி எண்ணிகை பின்வருமாறு தரப்பட்டுள்ளது. குறித்த விவரங்கள் இணைப்பு 1 இல் காட்டப்பட்டுள்ளன.

பணியாட்தொகுதியினர் வகை	அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினர்	2017.12.31 ஆந் திகதிய வெற்றிடங்களின் எண்ணிக்கை
சிரேஷ்ட முகாமையாளர்கள்	32	15
நடுத்தர மட்டத்திலான முகாமையாளர்கள்	14	08
கனிஷ்ட முகாமையாளர்கள்	24	13
முகாமைத்துவ உதவியாளர்கள்	54	09
ஆரம்ப நிலை - தொழிநுட்பம் சார்ந்த	14	05
ஆரம்ப நிலை - தொழிநுட்பம் சாராத	27	04
மொத்தம்	**165**	**54**

II ஆம் பகுதி

2017 ஆம் ஆண்டினுள் பூரணப்படுத்திய பணிகள்

2017 சனவரி மாதம் முதல் டிசம்பர் வரையிலான காலத்துக்கிடையில் பூரணப்படுத்திய பணிகள் தொடர்பான விபரம் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

2. கற்றல் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள்

கற்றல் மற்றும் அபிவிருத்திப் பிரிவு என்பது இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் கற்றல் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் ஒரு முக்கிய கேந்திரப் பிரிவாகும். அதன் மூலம் அரசத் துறை அலுவலர்களின் இயலளவு விருத்தித் தேவையினைப் பூரணப்படுத்தும் வகையில் கற்றல் மற்றும் அபிவிருத்திச் சேவைகள் வழங்கப்படுகின்றன. இதன் நோக்கத்தினை அடைந்து கொள்ளும் வகையில் பிரிவிடம் காணப்படும் அரசத் துறையில் மாற்றமுறும் திறன் மேம்பாட்டுத் தேவையுடன் முன் செல்லக்கூடிய கட்டமைப்பொன்றும் காணப்படுகின்றது.

அரசத் துறையின் மற்றும் அதன் முகாமைத்துவப் பணியாட்தொகுதியினரின் திறன்களை விருத்தி செய்யும் வகையில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் பின்வரும் செயற்பாடுகளை நடாத்தி வருகின்றது.

அ) பின்வரும் நாடளாவிய சேவையினுள் புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்களுக்கான சேவைப் புதுமுகப் பயிற்சியினை நடாத்துதல். (கட்டணம் அறவிடப்படாத நிகழ்ச்சித்திட்டங்கள்)

இலங்கை நிர்வாக சேவை (இ.நி.சே.),

இலங்கை கணக்காளர் சேவை (இ.க.சே.),

இலங்கைத் திட்டமிடல் சேவை (இ.தி.சே.),

இலங்கை விஞ்ஞான சேவை (இ.வி.சே.),

இலங்கை கட்டிடக் கலையியல் சேவை (இ.க.க.சே.),

இலங்கை பொறியியலாளர் சேவை (இ.பொ.சே.),

இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை (இ.த.தொ.தொ.சே.),

ஆ) தனது முதலாம் மற்றும் மூன்றாம் வகுப்பு மட்டங்களின் போது நாடளாவிய சேவைகளில் கடமையாற்றும் அலுவலர்களுக்காகக் கட்டாய இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் (கட்டணம் அறவிடப்படாத நிகழ்ச்சித்திட்டம்)

இ) டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்கள் (கட்டணங்கள் அறவிடப்படாத நிகழ்ச்சித்திட்டங்கள்)

ஈ) குறுகிய காலப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் (கட்டணங்கள் அறவிடப்படாத நிகழ்ச்சித்திட்டங்கள்)

உ) தேவைகளுக்கு ஏற்ப நடாத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் - அரசத் துறை நிறுவனங்கள் மற்றும் அரசத் தொழில் முனைவோர்களினால் கோரப்படும் விண்ணப்பங்களை அடிப்படையாகக் கொண்டு (கட்டணங்கள் அறவிடப்படாத நிகழ்ச்சித்திட்டங்கள்)

ஊ) கருத்தரங்கு (கட்டணங்கள் அறவிடப்படும் மற்றும் கட்டணங்கள் அறவிடப்படாத நிகழ்ச்சித்திட்டங்கள்)

2.1 சேவைப் புகுமுகப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

நாடு தழுவிய சேவைகளில் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட அலுவலர்களுக்காக, தமது சேவையில் முன்னோடிகளாக விளங்கி சுயமாக தமது கடமைகளை நிறைவேற்றுவதற்கு முடியுமான வகையிலும் விடயப் பரப்பு தொடர்பாக பரந்த அளவில் உள்ளடக்கப்படும் வகையிலும் அவர்களுக்கு அவசியப்படும் அறிவியல் நிபுணத்துவத்தைப் பெறும் வகையிலும் மற்றும் மனப்பாங்கு ரீதியாக திடப்படுத்தும் நோக்கிலும் சேவைப் புதுமுகப் பயிற்சி நடாத்தப்படுகின்றது. பிரதான விடயப் பரப்பெல்லை உள்ளடக்கப்படும் வகையில் தயாரிக்கப்பட்ட மொடியிலுக்கு மேலதிகமாக கொத்தலாவல பாதுகாப்பு அக்காடமியின் ஒத்துழைப்புடன் வெளிவாரியான பயிற்சிகளாக தனிப்பட்ட மற்றும் ஆளுமை விருத்தியின் பொருட்டு விசேட நிகழ்ச்சித்திட்டங்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் மொழித் தேர்ச்சி நிலையம் சேவைப் புதுமுகப் பயிற்சியினுள் ஆங்கில மொழிப் பயிற்சியையும் நடாத்தியுள்ளது. ஒருசில நிகழ்ச்சித்திட்டங்கள் பிரிட்டி‘ கவுன்சிலின் ஒத்துழைப்புடன் நடாத்தப்படுகின்றன.

மீளாய்வு ஆண்டினுள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் நாடு தழுவிய சேவைகளில் கடமையாற்றும் அலுவலர்கள் 774 பேருக்கு 09 சேவைப் புதுமுகப் பயிற்சிகள் நடாத்தப்பட்டதுடன், அவை தொடர்பான விளக்கங்கள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.

	நாடளாவிய சேவை	பங்குபற்றியோரின் எண்ணிக்கை
1	இலங்கை நிர்வாக சேவை (திறந்த) - 2017 ஆம் ஆண்டுக் குழு	101
2	இலங்கை நிர்வாக சேவை (மட்டுப்படுத்தப்பட்ட) - 2017 ஆம் ஆண்டுக் குழு	28
3	இலங்கை நிர்வாக சேவை (திறந்த) - 2015 ஆம் ஆண்டுக் குழு	209
4	இலங்கை கணக்காளர் சேவை - 2015 ஆம் ஆண்டுக் குழு	179
5	இலங்கை கணக்காளர் சேவை - 2016 ஆம் ஆண்டுக் குழு	84
6	இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை (I ஆம் வகுப்பு அலுவலர்கள் - III ஆம் தரம்)	31
7	இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை (II ஆம் வகுப்பு அலுவலர்கள் - II ஆம் தரம்) குழு 1	42
8	இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை (II ஆம் வகுப்பு அலுவலர்கள் - II ஆம் தரம்) குழு II	50
9	இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை (III ஆம் வகுப்பு அலுவலர்கள் - II ஆம் தரம்)	50
	மொத்தம்	774

மேற்கூறப்பட்ட சேவைப் புகுமுகப் பயிற்சிகளுக்கு பின்வரும் அலுவலர்களின் மூலம் நடாத்தப்பட்ட விசேட வருகைதரு விரிவுரைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- திரு. ஒஸ்டின் பிரனாந்து அவர்கள், சனாதிபதி செயலாளர் (முன்னாள் ஆளுநர் - கிழக்கு மாகாணம்) - அரச அலுவலர்களின் பணிகள் மற்றும் நிர்வாகத்தின் பல்வேறு மட்டங்கள்
- திரு. சமன் ஏக்கநாயக்க அவர்கள், பிரதம மந்திரி செயலாளர் - வலுப்படுத்தப்பட்ட இலங்கை மற்றும் 2017 ஆம் ஆண்டினைத் தாண்டிய தலைமைத்துவம்
- திரு. சுமித் அபேசிங்க அவர்கள் - அமைச்சரவைச் செயலாளர் - இலங்கை அரசத் துறையின் நிர்வாகப் பணிகள்

- கலாநிதி. ஆர்.எச்.எஸ். சமரதுங்க அவர்கள், பொதுத் திறைசேரியின் செயலாளர் - இலங்கையின் சமூகப் பொருளாதார உருமாற்றம்.
- திரு.ஜே.ஜே. ரத்னசிறி அவர்கள், அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் - இலங்கை நிர்வாக சேவை அலுவலர்களின் பொறுப்புக்கள்
- திரு. பி.பீ. அபேகோன் அவர்கள், முன்னாள் சனாதிபதிச் செயலாளர் - பணியாளர் - தலைவராகும் விதம்
- திரு. நீல் டீ அல்வீஸ் அவர்கள், உள்நாட்டலுவல்கள் அமைச்சு - அரச ஊழியர்களின் நெறிமுறைகள்
- தாரா விஜேதிலக்க, முன்னாள் செயலாளர் மற்றும் இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலர் - அரச சேவையில் உண்மைத்தன்மை மற்றும் நடத்தையினை உயர் மட்டத்தில் வைத்திருத்தல் மற்றும் நம்பிக்கைத் தன்மையுடன் பேணுதல்
- பேராசிரியர் சிறிமால் அபேரத்ன அவர்கள் - இலங்கைப் பொருளாதாரமும் தற்போதைய போக்குகளும்





2017 ஆம் ஆண்டின் போது இலங்கை நிர்வாக சேவைக்குப் புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட குழுக்கள் இரண்டிலும் 230 பேரினை உள்ளடக்கிய வகையில் (2015 ஆம் ஆண்டுக் குழு மற்றும் 2017 ஆம் ஆண்டு மட்டுப்படுத்தப்பட்ட குழு) இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் சேவைப் புதுமுக பயிற்சியினைப் பூரணப்படுத்தியதன் பின்னர் அரச நிர்வாக டிப்ளோமா தகைமையுடன் வெளியேறிச் சென்றார்கள். அதற்கு மேலதிகமாக திறந்த பிரிவில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 101 பேரினைக் கொண்ட புதிய குழுவொன்றும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பயிற்சி மொடியுலினைப் பூரணப்படுத்தியதன் பின்னர் களப் பயிற்சிக்காக தேர்தல்கள் திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டுள்ளார்கள்.

இலங்கை கணக்காளர் சேவைக்குப் புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 263 அலுவலர்கள் மற்றும் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையினுள் புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 173 அலுவலர்களுக்கான சேவைப் புதுமுகப் பயிற்சிகள் 2017 ஆம் ஆண்டினுள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் பூரணப்படுத்தப்பட்டுள்ளது.

	நாடளாவிய சேவைகள்	கலந்து கொண்டோரின் எள்ளிக்கை	முன்னேற்றம்
1	இலங்கை நிர்வாக சேவை (மட்டுப்படுத்தப்பட்ட) - 2017 ஆம் ஆண்டுக் குழு	27	நிறைவு செய்யப்பட்டுள்ளது
2	இலங்கை நிர்வாக சேவை (திறந்த) - 2015 ஆம் ஆண்டுக் குழு	203	நிறைவு செய்யப்பட்டுள்ளது
3	இலங்கை கணக்காளர் சேவை - 2015 ஆம் ஆண்டுக் குழு	169	நிறைவு செய்யப்பட்டுள்ளது
4	இலங்கை கணக்காளர் சேவை - 2016 ஆம் ஆண்டுக் குழு	80	நிறைவு செய்யப்பட்டுள்ளது
5	இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை (I ஆம் வகுப்பு அலுவலர்கள் - III ஆம் தரம்)	31	நிறைவு செய்யப்பட்டுள்ளது
6	இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை (II ஆம் வகுப்பு அலுவலர்கள் - II ஆம் தரம்) 1 ஆம் தரம்	42	நிறைவு செய்யப்பட்டுள்ளது
7	இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை (II ஆம் வகுப்பு அலுவலர்கள் - II ஆம் தரம்) 2 ஆம் தரம்	50	நிறைவு செய்யப்பட்டுள்ளது
8	இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை (III ஆம் வகுப்பு அலுவலர்கள் - III ஆம் தரம்)	50	நிறைவு செய்யப்பட்டுள்ளது
	மொத்தம்	**652**	

2.2 சகல நாடளாவிய சேவைகளுக்குமான கட்டாயக் கற்றல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் நாடளாவிய சேவை அலுவலர்களின் தொழில் வளர்ச்சிக்கு அவசியப்படும் அறிவு, திறமைகள் மற்றும் மனப்பாங்கினைத் தொடர்ச்சியாக செறிவூட்டல் மற்றும் அபிவிருத்தி செய்வதனை தனது முக்கியப் பொறுப்பாக இனங்கண்டுள்ளது.

அதனால் நிறுவகம் வினைத்திறன் மற்றும் விளைத்திறன் மிக்க அரச சேவையினைச் சான்றுப்படுத்தும் வகையில் இவ் அலுவலர்களுக்கு மத்தியில் தொடர்ச்சியான கற்றல் கலாசாரத்தினை ஊட்டுவது உயர் முக்கியத்துவத்தினைப் பெறுகின்றது. அதற்கிணங்க நாடளாவிய சேவைகளில் உள்ள அலுவலர்களுக்கென்றே நடாத்தப்படும் இந் நிகழ்ச்சித்திட்டங்கள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளன.

- காலத்துக்குக் காலம் அவசியப்படும் விசேடமாக இனங்காணப்பட்டுள்ள நடத்தை ரீதியான மற்றும் தொழில்நுட்ப ரீதியான திறமைகளை விருத்தி செய்தல்.
- வேகமாக மாற்றமுறும் சமூகத்தில் அன்றாடம் அதிகரித்து வரும் சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் தேவைப்படும் அறிவு மற்றும் திறன்களை தொடர்ச்சியாக இற்றைப்படுத்தல் மற்றும் மேம்படுத்துதல்.

அதன் காரணமாக 2017 ஆம் ஆண்டினுள் நிறுவகத்தினால் இலங்கை நிர்வாக சேவையின் மற்றும் இலங்கை கணக்காளர் சேவையின் அலுவலர்கள் 567 பேருக்கு நடுத்தர அளவிலான தொழில்சார் இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. அதன் விபரம் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

சேவைகள்	நிகழ்ச்சித்திட்டங்கள்	கலந்து கொண்டோரின் எண்ணிக்கை
இலங்கை நிர்வாக சேவை (I ஆம் வகுப்பு)	6	177
இலங்கை நிர்வாக சேவை (III ஆம் வகுப்பு)	8	273
இலங்கை கணக்காளர் சேவை (I ஆம் வகுப்பு)	3	84
இலங்கை கணக்காளர் சேவை (III ஆம் வகுப்பு)	1	33
மொத்தம்	**18**	**567**

முதலாம் வகுப்பு அலுவலர்களுக்கான வெளிநாட்டு அனுபவத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக மலேசியாவிற்கான சுற்றுலாவின் மூலம் இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்றும் உள்ளடக்கப்பட்டிருந்தது. மலேசியா சுற்றுலா அனுபவத்தின் போது நடைமுறை அனுபவங்களைக் கற்றுக் கொள்ளல் மற்றும் அனுபவங்களைப் பெற்றுக் கொள்வது இந் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாக அமைந்திருந்தது. பயிற்சிப் பாடத் திட்டம் மற்றும் முறைமைகள் அடிப்படையாக தகவல் பரிமாற்றம் மற்றும் சர்வதேச ரீதியாக பயன்படுத்தப்படும் சிறந்த நடைமுறைகளைக் கற்பதனை முக்கிய இலக்காகக் கொண்டு குழு ரீதியாக வலுவூட்டும் வகையில் அமைந்த உத்திகளின் மீது அடிப்படையாகக் கொண்டுள்ளது.

அதற்கிணங்க இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் நடுத்தர மட்டத்திலான தொழில்சார் இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை பூரணப்படுத்தியுள்ள இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்கள் 126 பேர், இலங்கை கணக்காளர் சேவையின் அலுவலர்கள் 14 பேர் மற்றும் இலங்கைத் திட்டமிடல் சேவையின் அலுவலர்கள் 13 பேருக்குமாக, 2017 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மலேசியாவுக்கான வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தில் கலந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.





DEVELOPMENT ADMINISTRATION MODERNIZATION AND TRANSFORMATION PROGRAMME (THE MALAYSIAN EXPERIENCE)

11 - 17 June 2017, Kuala Lumpur, Malaysia






Development Administration Modernization and Transformation Programme
(The Malaysian Experience)
21-27 October 2017, Berjaya Times Square Hotel
Kuala Lumpur, Malaysia.
SEATED: A.D. HIRANTHI KAWSHALYE RANASINGHE, JANAKI DAMAYANTHI AMARATHUNGA, THILANKA RUWINDANIE WETTHASINGHE HORAWALA WITHANAGE, HETTIARACHCHIGE MARIAN SUJEEWA PUSHPA KUMARI THISSERA, S.L.D.K. WIJAYASINGHE, CHAMPIKA THUSHARI ROSHANIE DISSANAYAKE, DR. SHAHRIZIN, HANIZA (UNIMARA), ANUSHA NILANTHI BATAWALA GAMAGE, N.M.J. FERNANDO, W.M.S.N. CHANDANI, NIRMALA SUBHASHINEI ATHUKORALA, DANEESHA CHUSHNI JAYADEWA.
STANDING: EDDY, W.G.W. WANASINGHE, M.G. LALITH ANANDA, RAJALINGAM RUSHANDAN, B.J.R.A.W.C. RANASINGHE, R.K.R.R. RANAWEERA, T.R. WARUNA SRI DHANAPALA, D.D. UPUL SHANTHA DE ALWIS, A.M.R.S.A.B. ADIKARI, S.M.D.C. SAMARASEKARA, NORISZIAN.
TOP ROW: N.K.R. PATHIRANA, K.U. CHANDRALAL, G.G.S.C. ROSHAN, E.A. RATHNASEELA, RANIL WICKRAMASEKARA, H.A.V.P. HAPANGAMA, S.K.W. SISIRA KUMARA, L.W.M. GAMAGE, NALAKA KALUWEWE.

2.3 டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்கள்

2017 ஆம் ஆண்டினுள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறான டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

தொடரிலக்கம்	நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	நிகழ்ச்சித்திட்டத்தின் காலம் (நாள்)	நிகழ்ச்சித்திட்டங்களின் எ ண்ணிக்கை	கலந்து கொண்டோரின் எண்ணிக்கை
01	தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா	6 மாதங்கள்	1	16
02	அரச பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நிர்வாக டிப்ளோமா	1 வருடம்	1	40
03	அரச பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நிர்வாக டிப்ளோமா	1 வருடம்	1	57
04	அரச பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நிர்வாகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா	14 மாதங்கள்	1	40
05	களஞ்சிய முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா	1 வருடம்	1	36
06	வழங்கல் மற்றும் பொருள் முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா	1 வருடம்	1	30
07	ஆங்கில டிப்ளோமா	1 வருடம்	3	184+67+70
08	தொழில் வாய்ப்பிற்கு அவசியப்படும் ஆங்கில சான்றிதழ்ப் பாடநெறி	9 மாதங்கள் (3 மட்டங்களில்)		165+89+200

2017 ஆம் ஆண்டினுள் அலுவலர்கள் 43 பேர் பெறுகை மற்றும் ஒப்பந்த நிர்வாக டிப்ளோமாவினைப் பூர்த்தி செய்துள்ளார்கள். அத்தோடு 23 அலுவலர்கள் இந்தியாவிற்கான சுற்றுலாவில் ஈடுபட்டு வெளிநாட்டுப் பயிற்சி அனுபவங்களைப் பெற்றுக் கொண்டுள்ளார்கள்.



இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் மொழித்தேர்ச்சி மையம் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் இரண்டின் காரணமாக அரசத் துறை அலுவலர்களுக்கு மத்தியில் பிரபல்யமடைந்துள்ளது.

- ஆங்கில டிப்ளோமா
- தொழில்வாய்ப்பு நிமித்தம் அமைந்த ஆங்கில சான்றிதழ்ப் பத்திர பாடநெறி (CEEP)

இம் மையத்தினால் நடாத்தப்படும் ஆங்கில டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் அரசத் துறை அலுவலர்களுக்கு மத்தியில் மிகவும் பிரபல்யமானதாகும். 2017 ஆம் ஆண்டின் போது இந்த டிப்ளோமாவினைத் தொடருவதற்காக 184 அலுவலர்களை, மூன்று சந்தர்ப்பங்களில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளதோடு 67 அலுவலர்கள் 2016 ஆண்டு முதல் தொடர்ந்தேர்ச்சியாக இந் நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்து கொண்டுள்ளார்கள். இதற்கு முன்னரான குழுக்களில் அலுவலர்கள் 70 பேர் 2017 ஆம் ஆண்டின் போது இந்த டிப்ளோமாப் பாடநெறியினை பூர்த்தி செய்துள்ளார்கள்.

2017 ஆம் ஆண்டின் போது தொழில்வாய்ப்பு நிமித்தம் அமைந்த ஆங்கில சான்றிதழ்ப் பத்திர பாடநெறிக்காக 165 அலுவலர்கள் உள்வாங்கப்பட்டதோடு, அவர்களில் 89 பேர் 2016 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்தேர்ச்சியாக இப் பாடநெறியினைத் தொடர்ந்த அலுவலர்களாவார்கள். கடந்த குழுக்களில் 200 அலுவலர்கள் 2017 ஆம் ஆண்டின் போது டிப்ளோமாவினைப் பூர்த்தி செய்துள்ளார்கள். மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் இரண்டின் மூலம் மொழித் தேர்ச்சி மையத்தினால் 9,073,600 ‘ரூபா தொகையை வருமானமாக சம்பாதித்துள்ளது.

இம் மையத்தினால் நாடளாவிய ரீதியான சேவைகளைக் கொண்ட அலுவலர்களுக்கிடையில் ஆங்கிலம் / சிங்கள பேச்சுப் போட்டியொன்றினை ஆரம்பித்து வைத்தார்கள். மேலும் அதன் மூலம் உள்ளக பணியாட்தொகுதியினருக்கான தொலைபேசி நெறிமுறைகள் மற்றும் தொடர்பாடல் திறன்களை பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன. இம்மையத்தினால் 2017 ஆம் ஆண்டினுள் அரசத் துறை அலுவலர்களுக்கான பொதுப் பேச்சுக்கள் (Public Speaking), பேச்சுவார்த்தைத் திறன்கள் (Negotiation Skills), பொது இராஜதந்திரம் (Public Diplomacy) மற்றும் நெறிமுறைகள் (Protocols) தொடர்பான பல நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டன.

பயிற்சி மற்றும் ஆலோசனைச் சேவைகளின் ஊடாக அரசத் துறை நிறுவனங்களின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை விருத்தி செய்வதற்கான ஒத்துழைப்பினை வழங்குவதற்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தில் தகவல் தொழில்நுட்பப் பிரிவு தாபிக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா என்பது அத்தியாவசியப்படும் தகவல் தொழில்நுட்பத் திறன்களை விருத்தி செய்யும் நோக்கத்திற்காக இப் பிரிவினால் நடாத்தப்படும் விசேட நிகழ்ச்சித்திட்டங்களில் ஒன்றாகும். இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் மூலம் கணனி ஓட்டுனர் உரிமம் நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டுள்ளதோடு அது இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் மற்றும் பிராந்திய தொலைக்கல்வி நிலையங்களில் உள்ள அரச துறை அலுவலர்களுக்கு மத்தியில் பிரபல்யமானது.

2.4 குறுகிய காலக் கற்றல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

மீளாய்வுக் காலத்தினுள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் மூலம் கீழே காட்டப்பட்டுள்ள குறுகிய கால நிகழ்ச்சித்திட்டங்கள் 34 நடாத்தப்பட்டுள்ளதோடு, அவற்றின் மூலம் 782 பேர் பயிற்சியளிக்கப்பட்டும் உள்ளார்கள்.

தொடரிலக்கம்	நிகழ்ச்சித்திட்டங்களின் தலைப்பு	நிகழ்ச்சித்திட்டங்களின் கால எல்லை (நாட்கள்)	நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	கலந்துகொண்டோரின் எண்ணிக்கை
01	அரச பெறுகையின் சாரம்சம் (Essence of Public Procurement)	3	4	70
02	விலை மனுக்கோரல் மதிப்பீடு தொடர்பான பயிலரங்கு Workshop on Bid Evaluation	3	5	104
03	நிதியற்ற முகாமையாளர்களுக்கான அரச நிதி முகாமைத்துவம் தொடர்பான பயிலரங்கு Workshop on Public Financial Management for Non-Financial Managers	3	1	19
04	அரச நிதி முகாமைத்துவம் தொடர்பான பயிலரங்கு Workshop on Public Finance Management	1	2	54
05	ஆராய்ச்சித் திட்டங்களை வரைவதற்கான பயிலரங்கு Workshop on Research Proposal Writing	1	2	23
06	சிரேஷ்ட முகாமையாளர்களுக்கான பொதுமக்களை விழித்துப் பேசுவதற்கான திறன் Public Speaking Skills for Senior Managers	2	2	38
07	ஒழுக்காற்று நடைமுறைகள் தொடர்பான பயிலரங்கு Workshop on Disciplinary Procedure	3	2	105
08	ஒழுக்காற்று நடைமுறைகள் தொடர்பான பயிலரங்கு Workshop on Disciplinary Procedure	5	1	26
09	ஒழுக்காற்று நடைமுறைகள் தொடர்பான சான்றிதழ்ப் பத்திரப் பாடநெறி Certificate Course Disciplinary Procedure	10	1	25
10	நிர்வாகிகளுக்கான சட்டம் (I ஆம் பகுதி) Law for Administrators (Part I)	5	1	19
11	நிர்வாகிகளுக்கான சட்டம் (II ஆம் பகுதி) Law for Administrators (Part II)	5	1	14
12	அனர்த்த இடர் முகாமைத்துவம் Disaster Risk Management	5	1	18
13	திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான பயிலரங்கு Workshop on Solid Waste Management	3	1	22
14	தீர்மானம் எடுப்பவர்களுக்கான மென் திறமை தொடர்பான பயிலரங்கு Workshop on Soft Skills for Decision Makers	3	2	30
15	கொள்கை ஆவணங்களை எழுதுதல் தொடர்பான பயிலரங்கு Workshop on Writing Policy Papers	4	1	11
16	பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சியளிப்பு தொடர்பான பயிலரங்கு Workshop on Training of Trainers	5	1	22
17	SLIDA வின் கணனி ஓட்டுனர் உரிமம் தொடர்பான சான்றிதழ் Certificate in SLIDA Computer Driving License	10	3	66
18	ஈ- அரச மற்றும் பாதுகாப்பு E-Government and Security	2	1	12
19	நிர்வாக அலுவலர்களுக்கான கணனிப் பயன்பாடு Computer Application for Administrative Officers	7	1	9

20	அமைச்சரவை விஞ்ஞாபனம் தயாரித்தல் தொடர்பான பயிலரங்கு Workshop on Preparing Cabinet Paper Memoranda	3 மணி	1	95
	மொத்தம்		**34**	**782**

சேவை புதுமுகப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், நடுத்தர மட்டத்திலான தொழிற் திறன் விருத்திப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பட்டப்பின் கற்கைகளுக்கு மேலதிகமாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் மூலம் பின்வரும் வகையில் காட்டப்பட்டுள்ள பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

தோ டுரி லக்கம்	நிகழ்ச்சித்திட்டங்களின் தலைப்பு	நிகழ்ச்சித்தி ட்டங்களின் கால எல்லை (நாட்கள்)	நிகழ்ச்சித்தி ட்டங்களின் எண்ணிக்கை	கலந்துகொ ண்டோரின் எண்ணிக்கை
01	இ.அ.நி.நிறுவகத்தின் கணனி ஓட்டுநர் உரிமம் தொடர்பான சான்றிதழ்ப் பத்திரப் பாடநெறி Certificate in SLIDA Computer Driving License	10	3	66
02	தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா Diploma in Information Technology	28	1	14
03	அலுவலக நிர்வாகத்திற்கான கணனிப் பயன்பாடு Computer Application for Office Administration	7	1	10
04	இ.அ.நி. நிறுவகத்தின் பணியாட்தொகுதியினருக்கான பாடநெறி முகாமைத்துவ அமைப்பு தொடர்பான விசேட கணனிப் பயிற்சி Special Computer Training on Course Management System for SLIDA Staff	2	1	16
05	ஈ - அரச மற்றும் பாதுகாப்பு E- Government & Security	2	1	11

2.5 அரச நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப தனிப்பயனாக்கப்பட்ட கற்றல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

அரச நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப 2017 ஆம் ஆண்டினுள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் மூலம் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 42 இனை நடாத்தியதோடு, 1129 அலுவலர்கள் அதன் மூலம் பயிற்சியினைப் பெற்றுக்கொண்டார்கள். இந் நிகழ்ச்சித்திட்டங்கள் சேவைப் பெறுனர் அமைப்புக்களினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளிற்கு ஒத்திசைவான வகையில் விசேடமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. மீளாய்வுக் காலப் பகுதியினுள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் மூலம் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் நாடளாவிய சேவைகளின் பணியாட்தொகுதியினரில் கிட்டத்தட்ட 32% ஆனோர் மாத்திரம் நன்மைகளைப் பெற்றுள்ளார்கள். குறித்த விடயத்தின் விளக்கம் இணைப்பு 2 இன் மூலம் காட்டப்பட்டுள்ளது.

2.6 பொது மாநாடுகள்

2017 ஆம் ஆண்டினுள் அரச அலுவலர்களை அறிவூட்டுவதற்காக தற்காலத்துக்குரிய தலைப்புக்கள் தொடர்பாகக் கீழ்க் காட்டப்பட்டுள்ள விசேட மாநாடுகள் நடாத்தப்பட்டன.

- **தகவலறியும் சட்ட உரிமை தொடர்பான பயிலரங்கு மற்றும் மெய்நிகர் கருத்தரங்கு**

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் மூலம் தகவலறியும் சட்ட உரிமைக்கு உரித்தான பிணக்குகள் பற்றி இந்தியாவின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் நோக்குடன் தகவலறியும் சட்ட உரிமை தொடர்பான பயிலரங்கு மற்றும் மெய்நிகர் கருத்தரங்கொன்று 2017 ஜூன் மாதம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இக் கருத்தரங்கு செயற்படுத்தப்பட்டது தகவலறிவதற்கான அணுகுமுறை நிகழ்ச்சித்திட்டத்தின் இந்தியாவின் ஒருங்கிணைப்பாளர் ஒருவர் மற்றும் தெற்காசியா, ஆபிரிக்க மற்றும் கரீபியாவினுள் தகவலறியும் சட்ட உரிமை தொடர்பாக பிரதான பயிற்சிக்குரிய வளவாளரான திரு. வென்கடேஷ் நாயக் அவர்களின் மூலமாகும். அரசாங்க நிர்வாக அமைச்சு, வெகுசன ஊடக அமைச்சு, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையங்கள் (ICTA) மற்றும் தகவலறியும் சட்ட உரிமை தொடர்பாக உள்நாட்டு நிபுணர்களும் இச் சந்தர்ப்பத்தில் கலந்து கொண்டார்கள்.

- **“தீர்மானங்களை எடுப்பதற்கு உதவியாக அமையும் சாதனமாக உலகளாவிய நிலைப்படுத்தல் அமைப்பு மற்றும் ட்ரோன் தொழில்நுட்பம்” (Global Positioning System and Drone Technology as a Decision Support Tool) பற்றிய கருத்தரங்கு**

ஒரு சிந்தனைத் தொட்டியாக, இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் அரச முகாமைத்துவம் தொடர்பான பட்டதாரிச் சங்கத்தின் (Alumni Association of Graduates of SLIDA’s Master of Public Management (AAGSLIDA) மூலம் “தீர்மானங்களை எடுப்பதற்கு உதவியாக அமையும் சாதனமாக உலகளாவிய நிலைப்படுத்தல் அமைப்பு மற்றும் ட்ரோன் தொழில்நுட்பம்” (Global Positioning System and Drone Technology as a Decision Support Tool) தொடர்பான கருத்தரங்கினை ஏற்பாடு செய்துள்ளார்கள். நில அளவைத் திணைக்களத்தின் மேலதிக நில அளவையாளர் நாயகமான திரு. எஸ்.டீ.பி.ஜே. தம்பேகம அவர்களினால் இவ் விரிவுரை நடாத்தப்பட்டது. ஒரு சிந்தனைத் தொட்டியாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் அரச முகாமைத்துவம் தொடர்பான பட்டதாரிகளின் சங்கத்தின் (Alumni Association of Graduates of SLIDA’s Master of Public Management (AAGSLIDA) மூலம் இலங்கையின் அரசத் துறை, தனியார்த் துறை மற்றும் இராணுவத்தின் நிறைவேற்றுப் பதவிகளை வகிக்கும் அலுவலர்களின் முகாமைத்துவ இயலளவினை மேம்படுத்துவதற்கான விரிவுரைத் தொடரொன்றினை ஏற்பாடு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.



- **வலுவாதார அபிவிருத்தி இலக்குகள், திறந்த அரச கூட்டுறவு மற்றும் பாலின சமத்துவம் குறித்த உணர்வுப்பூர்வமான அரச அலுவலர்கள் "Sustainable Development Goals. Open Government Partnership and Gender Sensitive Public Officers" தொடர்பான பயிலரங்கு**

இத் துறையில் நிபுணத்துவம் பெற்ற USAID இன் ஒத்துழைப்புடன் "வலுவாதார அபிவிருத்தி இலக்குகள், திறந்த அரச கூட்டுறவு மற்றும் பாலின சமத்துவம் குறித்த உணர்வுப்பூர்வமான அரச அலுவலர்கள் "Sustainable Development Goals, Open Government Partnership and Gender Sensitive Public Officers" தொடர்பான விசேட கருத்தரங்கொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.





- **தரம்மிக்க அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் அமைச்சரவைக் குறிப்பினைத் தயாரித்தல்.**

தரம் வாய்ந்த அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் அமைச்சரவைக் குறிப்புகளைத் தயாரிக்கும் திறனை விருத்தி செய்வதற்கான அவசியத்தினை இனங்கண்டு அமைச்சரவை அலுவலகத்தின் உதவியுடன் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் மூலம் அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் அமைச்சரவைக் குறிப்பினை சமர்ப்பிப்பது தொடர்பான செயலாளர்கள் மற்றும் அமைச்சுக்களில் உள்ள சிரே'ட அலுவலர்களுடன் சிந்தனைப் புரழ்வு அமர்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அமைச்சரவைச் செயலாளர் திரு. சுமித் அபேசிங்க அவர்களினால் இந்த நிகழ்வு தலைமை தாங்கப்பட்டது.



இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் பின்வரும் செயலமர்வுகள் நடாத்தப்பட்டதோடு, அதற்காக அரச மற்றும் தனியார்த் துறையின் நிறைவேற்று அதிகாரிகளில் அதிகமானோர் கலந்து கொண்டார்கள்.

- **திரு. பெரியசாமி மாணி அவர்களின் வழிகாட்டலின் கீழ் நடைபெற்ற "Ransomware" என்றால் என்ன? பற்றிய கருத்தரங்கு**

  தொலைத்தொடர்பு மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சு (MTDI) மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் (ICTA) ஒத்துழைப்புடன் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் மூலம் Ramsomware தொடர்பான ஈ அரசு பற்றிய கருத்தரங்கொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. End User Security Group, SOPHOS இன் பிராந்திய முகாமையாளரான திரு. பெரியசாமி மாணி அவர்களால் பிரதான விரிவுரை யொன்று நடாத்தப்பட்டது. அவர் Ramsomware வின் தாக்குதல்கள் காரணமாக சைபர்ஸ்பேசில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு தொடர்பான அச்சுறுத்தல்கள் இருப்பதாக கோடிட்டுக் காட்டினார். CERT|CC என்பனவும் இவ் அமர்வில் கலந்து கொண்டதோடு சைபர் ஸ்பேசின் பாதுகாப்பு தொடர்பான முக்கியத்துவத்தினையும் தெளிவுபடுத்திக் காட்டினார்.

  கலந்துரையாடலின் இடைநடுவே தொலைத்தொடர்பு மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளர் திரு. வசந்த தேசப்பிரிய அவர்களால் அரச தகவல்களுக்கு சைபர்த் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதனால் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்காக தேசிய பாதுகாப்புக் கொள்கையொன்று அவசியம் எனவும் தெளிவுப்படுத்தினார். அரசத் துறையின் பிரதான தகவல் தொடர்பான அதிகாரிகள் இவ் அமர்வில் கலந்து சிறப்பித்தார்கள்.








- **திரு. ஜோனதன் டி லா மொட்டே அவர்களினால் டிஜிட்டல் அரசு தொடர்பான கருத்தரங்கொன்றினை வழிநடாத்தல்.**





- **திரு. ஸ்டேபன் கொப்பே அவர்களினால் நடமாடும் வலையமைப்பு மதிப்பீடு தொடர்பான கருத்தரங்கினை வழிநடாத்தல்.**





- **சேவைத் திறமைக்கான இயலளவு விருத்தி**



அமைச்சரவை அலுவலகத்தின் ஒருங்கிணைப்புடன் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் மூலம் "சேவைத் திறமைக்கான இயலளவு விருத்தி" எனும் தலைப்பில் அரச அலுவலர்களுக்கான கருத்தரங்கொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் (Singapore National University), சர்வதேச டெமசெக் மன்றம் (Temasek Foundation International) மற்றும் சிங்கப்பூர் சிவில் சேவைக் கல்லூரி (Singapore Civil Service College) ஆகியனவற்றின் மூலம் வழிநடாத்தப்படுவதோடு, தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக கௌரவ அமைச்சர் ஹர்ஃ த சில்வா அவர்கள் கௌரவ விருந்தினராக இச் சந்தர்ப்பத்தில் கலந்து கொண்டார்.





- **5G சேவைகளை மேம்படுத்துதல்.**

தொலைத்தொடர்பு மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சின் ஒத்துழைப்புடன் 5G இனை பயன்படுத்துவதனால் கையடக்கத் தொலைபேசி தொழில்நுட்பத்தினால் மேற்கொள்ளப்படும் எதிர்கால புத்தாக்கங்கள் மற்றும் 5G சேவைகளை மேம்படுத்தல் உட்பட கையடக்கத் தொலைபேசியினை பயன்படுத்துவதன் மூலம் ஏற்படும் நன்மைகள் தொடர்பான விழிப்பூட்டலினைச் செய்வதற்காக பயிலரங்கொன்று 2017 ஆகஸ்ட் மாதம் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தில் நடைபெற்றது. இந்த மன்றத்திற்காக Internet of Things (IOT) என்ற தலைப்பில் முன்வைப்பொன்றும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

அரச துறை அலுவலர்கள், கையடக்கத் தொலைபேசி நிறுவனங்களின் முகவர்கள் மற்றும் தனியார்த் துறை நிறுவனங்களின் தொழில்நுட்ப வல்லுநர்கள் இம் மன்றத்தில் கலந்து சிறப்பித்தார்கள்.

- "How Great Leader gets Organizations to Archive Extraordinary" தொடர்பான பயிலரங்கு

அரச முகாமைத்துவம் தொடர்பான கலைமானிப் பட்டப் பாடநெறியின் 2016-2018 ஆம் குழுவிற்காக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பட்டப் பின் கற்கைப் பாடசாலையின் மூலம் "How great leader gets organizations to archive extraordinary" தொடர்பான பயிலரங்கு was held for MPM 2016-2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆந் திகதியன்று நடாத்தப்பட்டதோடு, அதனை வழிநடாத்தியது மலேசியாவின் முகாமைத்துவ மற்றும் விஞ்ஞான பல்கலைக்கழகத்தின் கலாநிதி திரு. அலி ஹுடிபியினாலாகும்.



- **"இலங்கையின் மனித வள முகாமைத்துவக் கொள்கை" தொடர்பான பகிரங்க விரிவுரை.**

இலங்கையின் மனித வள அபிவிருத்தி மன்றத்தின் தலைவர் திரு. தினேஃ வீரக்கொடி அவர்களால் "இலங்கை மனித வள முகாமைத்துவக் கொள்கை" தொடர்பான பகிரங்க விரிவுரையொன்று 2017 ஏப்ரல் மாதம் நடாத்தப்பட்டது. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் அரச முகாமைத்துவம் தொடர்பான கலைமானிப் பட்டதாரிகள் சங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடல்களை நடாத்துவதற்காக பணிப்பாளர் நாயகத்துடன் விசேட கலந்துரையாடலொன்றும் நடாத்தப்பட்டது.

2.7 வெளிநாட்டுப் பயிற்சி நிறுவனங்களுடன் பங்குதாரர்களாகக் கூட்டிணைந்து நடாத்தப்படும் கற்றல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

- **சிசிங்கப்பூரின் ஊளைடை ளுநசஎடைஉந ஊழடடநபந உடன் கூட்டிணைந்து "சேவை சிறப்பிற்கான இயலளவு விருத்தி (Capacity Building for Service Excellence) தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.**

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் சிங்கப்பூரின் சிவில் சேவைக் கல்லூரி (Civil Service College, Singapore (CSC)) மற்றும் டெமசெக் மன்றத்தின் (Temasek Foundation) ஒத்துழைப்புடன் "சேவை சிறப்பிற்கான இயலளவு விருத்தி" என்ற நிகழ்ச்சித்திட்டம் நாடளாவிய சேவை அலுவலர்கள் 70 பேருக்கு நடாத்தப்பட்டது. இவ் அலுவலர்கள் ஊளுஊ இன் போது தனது பயிற்சியினை நிறைவு செய்து இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் "செயற்திட்ட முகாமைத்துவத்தின் ஊடாக மாற்றத்தினை உருவாக்கல்" மற்றும் "நடுத்தர மட்டத்திலிருந்து தன்னையும் மற்றவர்களையும் வழிநடாத்துதல்" (Implementing Change through Project Management' and 'Leading from the Middle – Leading Self & Others) தொடர்பான சில மொடியுல்கள் கற்றுக்கொடுக்கப்பட்டன.





- **அவுஸ்திரேலியா அரசின் மூலம் இலங்கை ஆராய்ச்சியாளர்களுக்கு அதிஉயர் புலமைப் பரிசிலினை (AAF) வழங்குதல்.**

அவுஸ்திரேலியா அரசின் மூலம் வழங்கப்படும் அதிஉயர் புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டம் என்பது மொனாஷ் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் ஒத்துழைப்புடன் மற்றும் அவுஸ்திரேலியா அரசின் வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் வர்த்தக திணைக்களத்தின் மூலம் நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டு இலங்கை அரசத் துறையின் இயலளவு விருத்தி நிகழ்ச்சித் திட்டத் தொடராகும். 2016 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியா அரசினால் வழங்கப்படும் அதிஉயர் புலமைப் பரிசில் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஆராய்ச்சியாளர்கள் 15 பேருக்கு நன்மைகள் கிடைக்கப்பெற்றதோடு அவர்களினால் "இலங்கைப் பெண்களை தொழில் முனைவோராகக் கட்டியெழுப்புதல்" தொடர்பான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 2017 ஆம் ஆண்டின் முதல் அரைவாசியின் போது இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் மூலம் நிகழ்ச்சித் திட்டமொன்றினை ஏற்பாடு செய்துள்ளதோடு, ஆராய்ச்சியாளர்களின் கண்டுபிடிப்புக்களை பகிர்ந்து கொள்வதற்காக இந்த அதிஉயர் புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் பழைய விஞ்ஞானிகள் 15 பேர் நன்மைகளைப் பெற்று வருகின்றார்கள்.

அவுஸ்திரேலியா அரசின் மூலம் வழங்கப்படும் அதிஉயர் புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டம் 17 (AAF 17) இன் மூலம் "இலங்கையின் நிலைபேறான அபிவிருத்திற்காக தனியார்த் துறையின் ஒத்துழைப்பும், சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகள் மற்றும் பிரயோகங்கள்" (Private Sector Engagement for Sustainable Development in Sri Lanka: Evidence based Policy and Practice) தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளதோடு, 2025 ஆம் ஆண்டிற்காக அரசின் தொலைநோக்காக அமைந்த தன்னிறைவினைக் கொண்ட நாடு மற்றும் 2030 ஆம் ஆண்டிற்கான தொலைநோக்காக அமைந்துள்ள நிலைபேறான ஒரு யுகத்தினை அண்மிப்பதற்காக நடவடிக்கை எடுத்தலினை அடிப்படையாகக் கொண்டு "2018 இன் போது இலங்கையினுள் வணிக நடவடிக்கைகளை ஏற்படுத்துதல்" எனும் இலக்கினை எட்டுவதற்கான பயண வசதிகளை வழங்குதல் தொடர்பாகக் கவனம் செலுத்துதல். இவ் அதிஉயர் புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டம் அவுஸ்திரேலியா அரசினால் வழங்கப்படும் அதிஉயர் புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமைந்த புலமைப் பரிசில் பெறுநர்களுக்கு இலங்கைக்கான மிகவும் சிறந்த எதிர்காலத்தினை தோற்றுவிக்கும் நோக்கத்துடன் சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கொள்கைத் திட்டமிடலின் பொருட்டு வெற்றிகரமான ஒத்துழைப்பக்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு அவசியப்படும் தத்துவார்த்த மற்றும் நடைமுறை சார்ந்த பின்னணி வழங்கப்படும்.



- **அலுவலர்களுக்கான ஒருங்கிணைப்பு செய்யப்பட்ட வெளிநாட்டு பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்.**

2017 ஆம் ஆண்டினுள் 193 அலுவலர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு பயிற்சி நிறுவனங்கள் பின்வரும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைப்பு செய்கின்றது.

பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	இடம்	திகதிகள்	பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை
அரச நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான பயிற்சி	இந்திய அரசின் முகாமைத்துவ நிறுவனம் (Institute of Management in Government, India)	2017 ஜூன் மாதம் 12-16	30
கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி அலுவலர்களுக்கான இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டம்	இந்திய அரசின் முகாமைத்துவ நிறுவனம் (Institute of Management in Government, India)		30
	இந்திய அரசின் முகாமைத்துவ நிறுவனம் (Institute of Management in Government, India)	2017 ஜூலை 10-14	30
தலைமைத்துவ மற்றும் முகாமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	பிரித்தானிய சிவில் சேவைக் கல்லூரி (Civil Service Academy, UK)	10-14 ஜூலை 2017	13
நிறைவேற்று அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	AIT, Thailand	2017 ஆகஸ்ட்	30
நிறைவேற்று அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	தாய்லாந்தின் பாங்கொக்கின் சிரிபெதும் பல்கலைக்கழகம் (Sripatum University in Bangkok, Thailand)		30
அரச கொள்கை மற்றும் முகாமைத்துவம்	at KDI School Korea	2017 செப்டம்பர் 17-23 வரை மற்றும் ஒக்டோபர் 15-21 வரை	30






INSTITUTE OF MANAGEMENT IN GOVERNMENT THIRUVANANTHAPURAM
Training Programme on Public Administration and Development for the senior Administrators of Govt. of Srilanka (12.06.2017 to 16.06.2017)


INSTITUTE OF MANAGEMENT IN GOVERNMENT THIRUVANANTHAPURAM
Training Programme on Public Administration and Development for the senior Administrators of Govt. of Srilanka
(10.07-2017 to 14.07.2017)


INSTITUTE OF MANAGEMENT IN GOVERNMENT THIRUVANANTHAPURAM
Training Programme on Public Administration & Development for
Senior Administrators of Govt. of Srilanka from 18.12.2017 to 22.12.2017


2017 Study Tour Program
for Sri Lankan All Island Services

2.9 வெளிநாட்டவர்கள் நிமித்தம் நடாத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

- **இந்தோனேசியா அலுவலர்களுக்கானது**


இலங்கை மற்றும் இந்தோனேசியா - தென் ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் மூலம் செயலாற்றுகையின் அடிப்படையின் மீது அமைந்த வரவு செலவுத் திட்டத்தினை தயாரித்தல் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது. இந்தோனேசியா தேசிய அபிவிருத்தித் திட்டமிடல் தொடர்பான அமைச்சின் (BAPPENAS), இந்தோனேசியாக் குடியரசின் தேசிய அபிவிருத்தி திட்டமிடல் தொடர்பான அமைச்சின் சிரேஷ்ட அலுவலர்கள் ஏழு பேர் மற்றும் JICA செயற்திட்டத்தின் பணியாட்தொகுதியினர் இருவருர் இலங்கையின் செயற்திறனை அடிப்படையாகக் கொண்ட வரவுசெலவுத் திட்டத்தினை (FBB) தயாரித்தல் தொடர்பாக இரு நாட்டினதும் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்வதன் பால் கவனம் செலத்தும் வகையிலான இவ் ஐந்து நாள் கொண்ட நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

இந் நிகழ்ச்சித்திட்டத்தின் செயல்திறனை அடிப்படையாகக் கொண்டு வரவுசெலவுத் திட்டத்தினைத் தயாரித்தல் தொடர்பாக இலங்கையின் பழக்க வழக்கங்களை புரிந்து கொள்வதற்கு முடியுமான வகையில் பிரயோக அனுபவங்களின் பால் அதிகளவு கவனம் செலுத்தப்பட்டது.



- **நேபாள அதிகாரிகளுக்கு**

மேலும் 2017 ஜூலை மாதம் நேபாளின் சிரேஷ்ட அரசத் துறை அலுவலர்கள் 06 பேருக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் நடாத்தப்பட்டது.




3. பட்டப்பின் படிப்பிற்கான பாடசாலை

2003 ஆம் ஆண்டின் போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) 1985 இலக்கம் 07 இனைக் கொண்ட சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 1978 இலக்கம் 16 இனைக் கொண்ட பல்கலைக்கழக சட்டத்தின் 25ஏ உறுப்புரையின் கீழ் விதிக்கப்பட்ட கட்டளைக்கு ஏற்ப முதுகலைமானிப் பட்டத்தினை வழங்கும் நிலை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கிணங்க பட்டப்பின் பட்டக் கற்கை பாடசாலையினை நிறுவியதுடன், பின்னர் அப் பாடசாலையினை தேசிய, வலய மற்றும் சர்வதேச மட்டத்தில் தொடர்ச்சியாக அரசப் பிரிவின் வல்லுநர்களுடன் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரச முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் பட்ட கற்கை நிகழ்ச்சித்திட்டத்தினை தயாரித்தலுடன் தொடர்பான கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு தற்காலத்தில் அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதான நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் ஏனைய தரப்பினர்களுடன் சமனான தங்களது முகாமையாளர்களிடமிருந்து ஒன்றுதிரட்டிய பெறுமதியுடன் கூடிய ஒத்துழைப்பினை எதிர்பார்க்கும் மிக விரைவாக மாற்றமுறும் மற்றும் சவாலாக அமையும் அரச முகாமைத்துவ சூழலின் மீதாகும். அரச முகாமைத்துவம் தொடர்பாக இச் சிறப்பு வாய்ந்த பட்டப்பின் பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் பட்டப்பின் பட்டமொன்றினைப் பெற்றுக்கொள்வதற்காக அதனைக் கற்பவர்களை அறிவினால் மேம்படுத்துதல் மற்றும் பல்வேறுபட்ட முகாமைத்துவ மட்டங்களின் போது தன்னம்பிக்கையுடன் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அவர்கள் திறன்களை அணிகலனாகக் கொண்டு மேற்கொள்வதாகும்.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பட்டப்பின் பட்டம் பெறும் கற்கைப் பாடசாலையின் மூலம் நடாத்தப்படும் அரச முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் பட்டத்திற்கான நிகழ்ச்சித்திட்டம் இந் நாட்டிற்கு பிரதான பிரயோக பட்டப்பின் பட்டத்திற்கான நிகழ்ச்சித்திட்டமாகும். அதற்கிணங்க அதில் கலந்து கொள்பவர்களை தேர்ந்தெடுக்கும் செயற்பாடு, நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளடக்கம் மற்றும் அதனை நடாத்தும் விதம், வேறு அதற்குச் சமனான நிகழ்ச்சித் திட்டங்களுடன் முற்றும் வேறுபட்டதாக அமைவதுடன் கலந்து கொள்பவர்களுக்கான வேறு நாடொன்றில் பிரயோக அனுபவங்களை பெற்றுக்கொள்ளும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. அதன் விளைவாக இந் நிகழ்ச்சித் திட்டத்தில் பதிவு செய்வதற்கு தொழில் வல்லுநர்களின் உயர் கேள்வி நிலவுவதுடன் அதன் எண்ணிக்கையும் உயர்வடைந்து கொண்டே செல்கின்றது.

அட்டவணை 1 : இதுவரை அரச முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் பட்டம் தொடர்பாக பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை



2017 ஆம் ஆண்டின் ஆரம்பத்தின் போது இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பட்டப்பின் பட்டக் கற்கைக்கான பாடசாலையின் மூலம் 94 பேர் பதிவு செய்துள்ள 2016-2018 ஆம் குழுவினை உள்வாங்குவதற்கான விழாவினை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டினுள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பட்டப்பின் பட்டக் கற்கைக்கான பாடசாலையின் மூவம் அரச முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் பட்டத்திற்கான குழுக்கள் மூன்று உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 224 ஆகும்.

அரசக் கொள்கை, முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் தொடர்பான சுய அனுபவங்களின் மூலம் அறிவினைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் சீனாவின் அரச நிர்வாகத்தில் இருந்து சிறந்த நடைமுறைகளை கற்றுக் கொள்ளும் நோக்குடன் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பட்டப்பின் பட்டக் கற்கை பாடசாலையின் மூலம் 2017 ஆம் ஆண்டின் போது முதுகலைமானிப் பட்டத்திற்காக சீனாவின் HUST பல்கலைக்கழகத்திற்கு கல்விச் சுற்றுலாவொன்றினை ஏற்பாடு செய்திருத்தல்.

அறிவினை உருவாக்குதல், பயன்படுத்தல், பாதுகாத்தல் மற்றும் பரவலாக்குதல் போன்ற நடவடிக்கைகளை அர்ப்பணிப்புடன் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பட்டப்பின் பட்டக் கற்கைக்கான பாடசாலையின் மூலம் "ஆராய்ச்சி செய்முறைகளாக மாற்றுதல், சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கொள்கைத் தொகுப்பு தொடர்பான மன்றம்" எனும் தொனிப்பொருளில் அதன் வருடாந்த ஆராய்ச்சி சிம்போசியம் (ஆய்வரங்கு) 2017 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21 ஆந் திகதியன்று இலங்கை சுங்கத் திணைக்களத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது மேற்குறித்த தலைப்பின் கீழ் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பட்டப்பின் பட்டக் கற்கைக்கான பாடசாலையின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட 3 ஆவது வருடாந்த கருத்துக் களமகும். இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் அரச முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் பட்டத்தினைப் பெற்ற இலங்கை சுங்க அலுவலர்கள் ஏழு பேரினால் இலங்கை சுங்கத்துடன் தொடர்பான "சரக்குகளைக் கையாளுதல் மற்றும் போக்குவரத்துத் திறன்" (Cargo Clearance and Transport Efficiency) மற்றும் "மனித வள முகாமைத்துவம் மற்றும் தொகுதியின் வினைத்திறன்" (Human Resource Management and Systems Effectiveness) தொடர்பான குழு ரீதியான ஆராய்ச்சிக் கட்டுரைகள் அலுவலர் குழாமிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.



பட்டம் வழங்கும் நிறுவகமாக தொழிற்படும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பட்டப்பின் பட்ட கற்கைக்கான பாடசாலையின் மூலம் அரசத் துறை நிமித்தம் தற்காலத்தில் முக்கியத்துவம் வாய்ந்த தலைப்புக்கள் தொடர்பாக செயலமர்வுகளைப் போன்ற விசேட நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன. இதற்கு உரித்தான இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பட்டப்பின் பட்ட கற்கைக்கான பாடசாலையின் மூலம் 2017 மார்ச் மாதம் "How great leader gets organizations to archive extraordinary" தொடர்பாக விசேட விரிவுரையொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், அது மலேசியாவின் முகாமைத்துவ மற்றும் விஞ்ஞான பல்கலைக்கழகத்தின் (Management & Science University Malaysia) கலாநிதி திரு. அலி கடிபி அவர்களால் நடாத்தப்பட்டது. "இலங்கையின் மனித வள முகாமைத்துவக் கொள்கை" (the Human Recourse Management Policy in Sri Lanka) தொடர்பான இரண்டாம் பிரபல்யமான விரிவுரை 2017 ஏப்ரல் மாதம் மனித வள அபிவிருத்தி கவுன்ஸிலின் தலைவர் திரு. தினேஃ வீரக்கொடி அவர்களினால் நடாத்தப்பட்டுள்ளது.

கூட்டாண்மை சமூகப் பொறுப்பு தொடர்பான செயற்திட்டமாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பட்டப்பின் பட்ட கற்கைக்கான பாடசாலையின் மூலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் ஒத்துழைப்புடன் ஏப்ரல் மாதம் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணியாட்தொகுதியினருக்கான சுகாதார முகாமொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பட்டப்பின் பட்டக் கற்கைக்கான பாடசாலை எதிர்கால விருத்திக்காக ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், இந் நிகழ்ச்சித்திட்டங்கள் இலங்கையின் கல்வித் தரக் கட்டமைப்பினுள் உட்படுத்தப்படும். அதற்கிணங்க நிகழ்ச்சித்திட்டத்தின் மற்றும் மொடியுலினுள் உள்ளடக்கத்தில் தொடர்ச்சியான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன.

4. முகாமைத்துவ ஆலோசனைகள்

நிறுவன ரீதியான அபிவிருத்திப் பிரிவினாது அரசத் துறை நிறுவனங்களுக்கான முகாமைத்துவ ஆலோசனையை வழங்கி வருகின்றது. இவ் ஆலோசனைகள் பணியாட்தொகுதியினர், செயல்முறைகள், கையேடுகள் மற்றும் வழிகாட்டல்களைத் தயாரித்தல் போன்றவற்றினை மறுபரிசீலனை செய்தல் வேண்டும். 2017 ஆம் ஆண்டினுள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் கீழ்க் காட்டப்பட்டுள்ள நிறுவன ரீதியான அபிவிருத்திச் சேவைகள் வழங்கப்படுகின்றன.

- தொலைத்தொடர்பு மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சுக்கு டிஜீட்டல் 2020 இற்கான பார்வை.
- எனும் ஆவணத்தை தயாரித்தல்.
- வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமானச் சேவைகள் (இலங்கை) இற்கான முகாமைத்துவ ஆய்வுக்கான முன்மொழிவு
- குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கான வேலைத் திட்டம்

5. 2017 ஆம் ஆண்டினுள் நடாத்தப்பட்ட பரீட்சைகள்

2017 ஆம் ஆண்டினுள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பரீட்சைப் பிரிவினால் 131 பரீட்சைகள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அவற்றில் 98 பரீட்சைகள் வெளிவாரியான நிறுவனங்களுக்காக நடாத்தப்பட்டுள்ளதுடன், எஞ்சிய பரீட்சைகள் உள்ளக நிகழ்ச்சித் திட்டங்களுக்காக அமைந்திருந்தன.

வெளிவாரியான பரீட்சைகளுக்கு பிரதானமாக வினைத்திறன் காண் தடைப் பரீட்சைகள் மற்றும் உள்ளகப் பதவியுயர்வுகளுக்கு உரித்தான பரீட்சைகளும் உள்ளடக்கப்படும். இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் மூலம் மீளாய்வுக் கால எல்லையினுள் கீழ்க் குறிப்பிடப்படும் வெளிவாரியான மற்றும் உள்வாரியான பரீட்சைகள் நடாத்தப்படுகின்றன. இதற்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் உதவியுடன் நிகழ்நிலை ரீதியாக நடாத்தப்படும் 24 பரீட்சைகளும் உள்ளடக்கப்படுகின்றன.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் ஊடாக 2017 ஆம் ஆண்டினுள் நடாத்தப்பட்ட பரீட்சைகள் தொடர்பான விபரம் கொண்ட இணைப்பு 03 இல் காட்டப்பட்டுள்ளது.

6. பொது நிர்வாகம்

6.1 மனித வள முகாமைத்துவம்

6.1.1. கீழேக் காட்டப்பட்டுள்ள பதவிகள் இரண்டாம் நிலை அடிப்படையின் கீழ் அமைந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.து.

சிரேஷ்ட ஆலோசகர்	03
நிகழ்ச்சித்திட்ட அலுவலர்	02
முகாமைத்துவ உதவியாளர்	01
சாரதி	01

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு மேலதிகமாக பங்களா பொறுப்பாளர் பதவி நிரந்தர அடிப்படையில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

6.1.2. கீழ்வருமாறு காட்டப்பட்டுள்ள பதவிகள் ஓய்வூதியம் பெறல், சேவையை இராஜினாமாச் செய்தல் மற்றும் இரண்டாம் நிலை அடிப்படையில் விடுவித்தல் மற்றும் சேவைக் காலம் முடிவுறுத்தல் ஆகியவற்றின் காரணமாக வெற்றிடங்கள் நிலவுகின்றன.ன.

மேலதிக பணிப்பாளர் நாயகம்	02
சிரேஷ்ட ஆலோசகர்	01
பணிப்பாளர் (நிதி)	01
உதவி ஆலோசகர்	01
நிகழ்ச்சித்திட்ட அலுவலர்	02
முகாமைத்துவ உதவியாளர்கள்	03
சாரதி	01

6.2. கணிப்பியல் திட்ட முகாமைத்துவம்

நிறுவகத்தின் கீழ்க் காட்டப்பட்டுள்ள இடங்கள் மீளாய்வு ஆண்டினுள் மீள தயார்படுத்தப்பட்டுள்ளது.

இடங்கள்	மொத்தச் செலவு ரூபா.
விடுதிகள்	5,354,602.14
சிறு கேட்போர் கூடம்	6,215,629.25
கல்லூரி	9,235,117.24
மின் அமைப்பு	1,014,438.61
ஆராய்ச்சி மையம்	9,060,970.82
குடியிருப்புக் கட்டிடம்	1,880,873.28

6.3 உள்ளார்ந்த செயலாக்கத்தினை விருத்தி செய்தல்

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் உள்ளகச் செயற்பாடுகளை தானியங்குவகை செய்வதற்காக நிறுவகத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் ஒத்துழைப்புடன் பின்வரும் 06 வகையான மென்பொருட்கள் உள்ளார்ந்த செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

- வரவு முகாமைத்துவ அமைப்பிற்கான புதிய மொடியுல்
- இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் கட்டண நுழைவாயிலுக்கான புதிய மொடியுல்
- இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் இணையத்தளங்களை புதுப்பித்தல்.
- இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பரீட்சை முகாமைத்துவ முறை
- இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பரீட்சைக்கான நிகழ்நிலைப்படுத்தப்பட்ட விண்ணப்பச் செயற்பாட்டு அமைப்பு (Online Admission Processing System)
- தகவல் தொழில்நுட்பப் பிரிவிற்கான கோப்பு முகாமைத்துவ அமைப்பு

6.4 தகவல் தொழில்நுட்பப் பிரிவின் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல்.

மீளாய்வு ஆண்டினுள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் உள்ளக வலையமைப்பு மற்றும் வன்பொருள் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல்.

- ககணனி உபகரணங்களுக்கான இடையூறுகள் ஏதுமின்றி மின்சாரத்தினை வழங்குவதற்காக மத்திய மின்வழங்கும் அலகுடன் (UPS) கூடிய தகவல் தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் 2 அல்லது 3 இனை மீள நிறுவுதல்.
- இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் வாசிகசாலைக்கான RFID அச்சிடல் வசதிகளை அறிமுகஞ் செய்தல்.
- இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் உதவியுடன் நூலக முகாமைத்துவ தொகுதி யொன்றினை (KOHA) நிறுவுதல்.
- புதிய சேவையகங்கள் இரண்டினைக் கொள்வனவு செய்தல்.

6.5 கணக்காய்வு வினவல்கள்

2017 ஆம் ஆண்டினுள் 12 கணக்காய்வு வினவல்கள் நடாத்தப்பட்டதோடு நிறுவனத்திற்கு கணக்காய்வு அறிக்கைகள் இரண்டு கிடைக்கப் பெற்றுள்ளதோடு, அவை அனைத்திற்குமான பதில்களும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் உள்ளகச் செயற்பாடுகளை தானியங்குவகை செய்வதற்காக நிறுவகத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவின் ஒத்துழைப்புடன் பின்வரும் 06 வகையான மென்பொருட்களை உள்ளார்ந்த செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது.

- வரவு முகாமைத்துவ அமைப்பிற்கான புதிய மொடியுல்
- இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் கட்டண நுழைவாயிலுக்கான புதிய மொடியுல்
- இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் இணையத்தளங்களை புதுப்பித்தல்.
- இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பரீட்சை முகாமைத்துவ முறை
- இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பரீட்சைக்கான நிகழ்நிலைப் படுத்தப்பட்ட விண்ணப்பச் செயற்பாட்டு அமைப்பு (Online Admission Processing System)
- தகவல் தொழில்நுட்பப் பிரிவிற்கான கோப்பு முகாமைத்துவ அமைப்பு

இக் காலப்பகுதியினுள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் உள்ளக வலையமைப்பு மற்றும் வன்பொருள் உட்கட்டமைப்பு வசதிகள் விருத்தி செய்யப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பப் பிரிவின் விருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட மற்றொரு முக்கிய நடவடிக்கையாக கணனி உபகரணங்களுக்கு தங்கு தடையின்றி மின்சாரத்தினை வழங்குவதற்காக மத்திய மின் வழங்கும் அலகுடன் (UPS) தகவல் தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் 2 அல்லது 3 இனை நிறுவுதல். இவ் ஆய்வுகூடங்கள் இரண்டின் மூலம் 30 பேரினைக் கொண்ட குழுவொன்றிற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

வருடத்தினுள், தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளுக்கான கீழ்க் குறிப்பிடப்படப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- தகவல் தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் இரண்டிற்குமாக நிகழ்நிலைப்படுத்தப்பட்ட மின் வழங்கும் அலகினை (UPS) அறிமுகஞ் செய்தல்.
- பரீட்சை அலகு, பாடசாலை மற்றும் வாசிகசாலையின் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவக வலையமைப்பிற்கு மீள மின்கம்பியிடல்.
- இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் வாசிகசாலைக்கான RFID அச்சிடல் வசதிகளை அறிமுகஞ் செய்தல்.
- இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் உதவியுடன் நூலக முகாமைத்துவ தொகுதி யொன்றினை (KOHA) நிறுவுதல்.
- புதிய சேவையகங்கள் இரண்டினைக் கொள்வனவு செய்தல்.
- இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் மூலம் நடாத்தப்படும் விசேட செயற்திட்டங்கள்.

7. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் மூலம் நடாத்தப்படும் விசேட செயற்திட்டங்கள்.

7.1 மோதல்களினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சமுதாய அபிவிருத்திப் பணிகளில் முன்னணி வகிக்கும் அலுவலர்களுக்கு JICA வின் மூலம் நிதியுதவி வழங்குதல். (FORWARD செயற்திட்டம்)

FORWARD செயற்திட்டத்திற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தும் முகவர் நிலையமாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் விளங்கி வருகின்றது. 2017 ஆம் ஆண்டினுள் வெற்றிகரமாக நிறைவு செய்துள்ள FORWARD செயற்திட்டங்களின் நோக்கமாக அமைவது முன்னணி வகிக்கும் அலுவலர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் சமுதாய அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பான அவர்களின் இயலளவு விருத்தியின் ஊடாக இலங்கையில் மோதல்களினால் பாதிப்புக்குள்ளாகிய பிரதேசங்களில் – வடக்கு, வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு – வழங்கப்படும் அரச சேவைகளின் தரத்தினை மேம்படுத்துதல். இச் செயற்திட்டத்திற்காக நிதியுதவி வழங்குவது JICA என்ற அமைப்பின் மூலமாகும்.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டலின் கீழ் ஒவ்வொரு முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி அலகுகளின் பணிப்பாளர்களினால் இந் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.


செயற்திட்ட காலப் பகுதியினுள் முன்னணி வகிக்கும் அலுவலர்கள் 900 பேரிற்கான இயலளவினை விருத்தி செய்வதற்காக இச் செயற்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. எவ்வாறு இருந்த போதிலும், இவ் இலக்கினை தாண்டிச் சென்றுள்ளதுடன், முன்னணி வகிக்கும் அலுவலர்கள் 1315 பேர் இதன் மூலம் பயிற்சியினைப் பெற்றுக் கொண்டுள்ளார்கள்.





7.2 ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களிற்கான உதவிகள்

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் (UNDP) மூலம் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் ஊடாக இயலளவு விருத்தி மற்றும் 7 மாவட்டங்களில் திட்டமிடல் மற்றும் செயற்படுத்துவதற்காக உள்ளூராட்சி பலப்படுத்தப்பட்டுள்ளது. சமுதாயஞ் சார் அமைப்புக்கள் மற்றும் உள்ளூராட்சி அலுவலர்கள் மூலம் சிறிய அளவிலான சமூகப் பொருளாதார அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கான வசதிகளை வழங்குதல், வலுவாதார அபிவிருத்திக்கான கொள்கை சார்ந்த வழிகாட்டல்களைத் தயாரித்தல் இச் செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளில் சிலவாகும்.



மேலும், இச் செயற்திட்டத்தின் மூலம் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் ஆராய்ச்சிப் பிரிவினை நிறுவுதல் மற்றும் அரசத் துறை அலுவலர்களுக்கிடையில் ஆய்வுக் கலாசாரத்தினை மேம்படுத்துவதற்கான உதவியும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.



8. விசேட நிகழ்வுகள்

8.1 35 வருட சிறப்பு வாய்ந்த சேவைகளைக் கொண்டாடுதல்.

1982 ஆம் ஆண்டின் போது நிறுவப்பட்ட இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் 35 வருட கால மேதக்க சேவையினை பூரணப்படுத்தி 2017 மே மாதம் மற்றொரு மைல்கல்லை எட்டியுள்ளது. 35 ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் சந்தர்ப்பத் தொடர்களை ஏற்பாடு செய்துள்ளதுடன், அதில் சமுதாயச் செயற்பாடுகள், செயலமர்வுகள், பேச்சுப் போட்டிகள் மற்றும் புலமைப் பரிசில்கள் / சான்றிதழ்களை வழங்குதல் என்பன உள்ளடக்கப்படுகின்றன. மேலும் நிறுவனத்தினால் புற்றுநோயாளர்களுக்கன வதிவிடமாக உள்ள "ஷாந்த செவண" விற்குச் சென்று புற்றுநோயாளர்களுக்கான மருந்துகள் மற்றும் உலர் உணவுப் பொருட்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திற்கு அளப்பாரிய சேவையினை மேற்கொண்ட அங்கு கடமையாற்றிய முன்னாள் பணிப்பாளர்கள் / பணிப்பாளர் நாயகர்களுக்கான பாராட்டு நிகழ்ச்சியுடன் இக் கொண்டாட்டம் நிறைவு பெற்றது. அதில் பிரதம அதிதியாக அரச நிருவாக, முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சின் கௌரவ அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார அவர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.


DG with Former Directors of SLIDA

அரச நிருவாக, முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சின் அமைச்சர், அமைச்சின் செயலாளர், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் முன்னாள் சகல பணிப்பாளர் நாயகர்கள் ஆண்டு நிறைவினைக் கொண்டாடுகையில்.


Lighting a Traditional Oil Lamp

கௌரவ அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார அவர்களினால் விழாவில் பாரம்பரிய மங்கள விளக்கேற்றும் நிகழ்வு

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவக வளாகத்தினை துப்புரவு செய்யும் வகையில் சிரமதானமொன்றினை ஏற்பாடு செய்தல் மற்றும் மஹரகமை ‘ாந்த செவணவிற்கு நிதியுதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் 35 ஆம் வருட ஆண்டு நிறைவு விழா அதற்காக நடைபெற்றது.







8.2 அபசுமைச் செயற்திட்டத்திற்கான (GREEEN Project) தேசிய பசுமை எரிசக்திக் கிண்ணத்தினை வெற்றியீட்டல். (Government’s Renewable Energy and Energy Efficiency Networking Project)

உயர் போட்டித்தன்மையுடன் கூடிய தெரிவுச் செயற்பாட்டின் ஊடாக ஜேர்மனியின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி அமைச்சின் மூலம் னுநரவளாந Gesellschaft fur Internationale Zusammenarbeit (GIZ) இன் ஊடாக ஒழுங்குபடுத்தப்பட்ட பசுமை எரிசக்திக் கிண்ணத்தினை வெற்றியீட்டுவதற்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்துக்கு முடியுமாக இருந்தது.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் பசுமைச் செயற்திட்டத்தில் (GREEEN Project) உள்ளடக்கப்படும் பின்வரும் ஆரம்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- 72 kw இனைக் கொண்ட சூரிய எரிசக்தித் தொகுதியொன்றினை பொருத்துதல்,
- நகர் புறத்திற்கான மின்கட்டமைப்பு அலகொன்றினை நிறுவுதல்,
- விடுதி கதவுகளுக்கான சுகுஜனு பூட்டுக்களைப் பொருத்துதல்,
- வகுப்பறைகளுக்கான எரிசக்தி கண்காணிப்பு அமைப்பு
- சுற்றுச் சூழல் கண்காணிப்பு அமைப்பு
- உயர் எரிவாயு அலகு





8.3 இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் கல்லூரிக் கட்டிடத் தொகுதியினைத் திறத்தல்.

சேதமடைந்த அலுவலக அறைகளில் கடமையாற்றும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் கல்லூரி அங்கத்தவர்களுக்கு அதி நவீன வசதிகளுடன் கூடிய அலுவலக வசதி வாய்ப்புக்களை அவர்களின் கல்லூரிக் கட்டிடத்தினுள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. புதிய கல்லூரிக் கட்டிடமானது செயலமர்வு மண்டபம், கலந்துரையாடல் / நேர்முக சந்திப்புக்களை மேற்கொள்வதற்கான திறந்த வெளி, வாசிப்புச் சாலையொன்று மற்றும் விரிவுரையாளர்களுக்கான அறை என்பனவற்றினையும் உள்ளடக்கியுள்ளது.





8.4 திரசர லங்கா கண்காட்சி

அதிமேதகு சனாதிபதி அவர்களினால் திறந்து வைக்கப்பட்ட, 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆந் திகதி முதல் ஏப்ரல் மாதம் 04 ஆம் திகதி வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்ட திரசர லங்கா - வலுவாதார அபிவிருத்தி தொடர்பான கண்காட்சிக்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகமும் பங்குபற்றியது. அதன் போது இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பசுமைக்கான ஆரம்ப நிகழ்வுகள் மற்றும் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட சேவைகளும் காண்பிக்கப்பட்டன.





8.5 இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திற்கு தெற்காசியாவின் முகாமைத்துவப் பயிற்சி நிறுவனத் தலைவர்களின் வருகை.

சான்றிதழ்களைப் பெற்ற தொழிற்சார் முகாமையாளர்களின் பிராந்திய மாநாடு - 2017 ஆம் ஆண்டில் கலந்து கொண்டவர்கள் தெற்காசியாவின் முகாமைத்துவ பயிற்சி நிறுவனங்களின் தலைவர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் குழுவொன்று மற்றும் தெற்காசியாவின் முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவனச் சங்கத்தின் உறுப்பினர்கள் (AMDISA) 2017 செப்டம்பர் மாதம் 27 ஆந் திகதியன்று இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்துக்கு நட்புறவுச் சுற்றுலாவினை மேற்கொண்டு இருந்தார்கள். அரசத் துறையின் இயலளவினை மேம்படுத்தும் வகையில் உரிய எதிர்காலப் பயிற்சிகள் மற்றும் ஆராய்ச்சிகள் தொடர்பாக நிறுவனங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு என்பன பற்றி பிரதிநிதிக் குழுவினரால் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

தெற்காசியாவின் முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவனச் சங்கத்தின் தலைவர் திரு. 'தீப் அலி அவர்கள், இந்தியாவின் முகாமைத்துவ நிறுவனத்தின் (Amedabad) பணிப்பாளர், பேராசிரியர் திரு. எரல் டீ. சுசா மற்றும் அங்கத்துவ நிறுவனங்களின் தலைவர்கள் இம் முகவர் குழுவிற்கிடையில் உள்ளடக்கப்படுவதோடு, தெற்காசிய முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவனச் சங்கத்தின் முன்னாள் தலைவர் மற்றும் சான்றிதழ்ப் பெற்ற தொழிற்சார் முகாமையாளர்களின்

தலைவர், பேராசிரியர். லக்'மன் ஆர். வட்டவல அவர்களின் தலைமையின் கீழ் நடாத்தப்பட்டது.



தெற்காசியாவின் முகாமைத்துவப் பயிற்சி நிறுவனத்தின் தலைவர்கள் மற்றும் தெற்காசியாவின் முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவனச் சங்கத்தின் உறுப்பினர்கள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகக் கட்டிடத்தில்

8.6 சீனாவின் Huazhong தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திற்கான (HUST) சுற்றுலா

சீனாவின் Huazhong தொழில்நுட்ப பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்துக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை வலுப்படுத்தும் நோக்கத்தில் சீனாவின் ர்ரயணாழபெ தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்களைக் கொண்ட குழு 2017 சனவரி மாதம் 10 ஆந் திகதியன்று இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திற்கு வருகை தந்தார்கள். Huazhong தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்துக்கும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்துக்குமிடையில் பரஸ்பரம் பயனளிக்கும் வகையில் கல்வி தொடர்பான, பயிற்சி மற்றும் கற்றல் போன்ற விடயப் பரப்புக்கள் தொடர்பாக அங்கு இரு தரப்பினருக்குமிடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

மேலும், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் நடாத்தப்படும் அரச முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தில் பட்டப்பின் பட்டப் பாடநெறியில் அதிகூடிய திறமையினைக் காட்டும் நபருக்கு கலாநிதிப் பட்டத்தினைப் பயில்வதற்கான பூரண புலமைப் பரிசிலொன்றினை 2018 ஆம் ஆண்டில் இருந்து வழங்குவதாக Huazhong தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் அங்கு உறுதிப்படுத்தி அறிவித்துள்ளது. அரச முகாமைத்துவ பட்டப்பின் பட்டப் பாடநெறியில் கலந்து கொள்ளும் குழுவினருக்கு சீன அரசின் அரசக் கொள்கை, முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் மற்றும் அரச நிர்வாகத் துறையினுள் பயன்படுத்தப்படும் சிறந்த உள்ளீடுகள் தொடர்பாக தனது அனுபவத்தினால் அறிவைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பட்டப்பின் பட்டக் கற்கைக்கான பாடசாலையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கல்விச் சுற்றுலாவின் இடையே இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்துடன் நடாத்தப்பட்ட சந்திப்பின் போது Huazhong தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தினால் அது பற்றி அறிக்கையிடப்பட்டுள்ளது.



சீனாவின் Huazhong தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் தலைவர் மற்றும் சிரேஷ்ட அரச அலுவலர்களுக்கு மத்தியிலான ஒரு சந்திப்பு

8.7 சீனாவின் ஜீனான் பல்கலைக்கழகத்தில் இருந்து ஒரு குழுவின் வருகை

சீனாவின் ஜினான் பல்கலைக்கழகத்தின் உப தலைவர் மற்றும் பேராசிரியர்கள் குழுவினர், அப் பல்கலைக்கழகத்திற்கும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திற்குமிடையிலான பரஸ்பரம் பிரயோசனம் பெறும் வகையில் பாடப் பரப்பெல்லையில் ஏற்படுத்திக் கொள்ள முடியுமான ஒத்துழைப்பு தொடர்பாக கலந்துரையாடுவதற்காக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திற்கு வருகை தந்தார்கள்.



ஜினான் பல்கலைக்கழகத்தின் உப தலைவர் மற்றும் சிரேஷ்ட பணியாட்தொகுதியினர் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினை சந்தித்த போது

8.8. வெள்ள நிவாரணம்

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் நலன்புரி சங்கத்தினால் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக 2010.05.27 ஆந் திகதியன்று வெள்ள நிவாரணங்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.







8.9 மரம் நடுகை

மர நடுகைத் தினத்தை அனுஷ்டிக்கும் வகையில் மரக் கன்றுகளை நடும் நிகழ்ச்சித் திட்டமொன்று நிறுவக வளாகத்தினுள் நடாத்தப்பட்டது.



8.10 இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணியாட் தொகுதியினருக்கான வெளியே அமைந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்.

மாதுரு ஓயாவில் - இலங்கை இராணுவத்தினருக்கு விசேட அதிரடிப்படை முகாமில் வெளியே அமைந்த பயிற்சியொன்று நடாத்தப்பட்டது.







8.11 உடற்பயிற்சித் தினம்

உடற்பயிற்சித் தினத்தை அனுஷ்டிக்கும் வகையில் நிகழ்ச்சித் திட்டமொன்று 2017 பெப்ரவரி மாதம் 02 ஆந் திகதியன்று நிறுவக வளாகத்தினுள் நடாத்தப்பட்டது.





8.12 வெசாக் கொண்டாட்டங்கள்

வெசாக் போயா தினத்தை கொண்டாடும் வகையில் நிறுவன வளாகத்தினுள் அறநெறி பிரசங்க நிகழ்ச்சியொன்று பட்டப்பின் பட்ட கற்கைக்கான பாடசாலையின் பழைய மாணவர்களால் எற்பாடு செய்யப்பட்டிருந்தது.







பகுதி III

புதிய முயற்சிகள் - 2017

9.1 மூலோபாயத் திட்டம் 2017-2021

மாற்றமுறும் சுற்றுச் சூழல் மற்றும் ஒவ்வொரு காலத்திலும் மாற்றத்தினை ஏற்படுத்தும் அரசத் துறைச் சேவைகளுக்கான கேள்வியினைக் கவனத்திற் கொண்டு, இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் அதன் தொலைநோக்காக அமைந்த "ஆசியாவின் கற்கை மற்றும் அபிவிருத்தித் தொடர்பான அதி சிறந்த மையமாகத் திகழுதல்" (to be the Center of Excellence in Learning and Development in Asia) என்பதனை அடைந்து கொளவதற்காக அதன் மூலோபாயத் திட்டங்களானது எதிர்வரும் 5 வருடங்களை (2017-2021) இனை இலக்காகக் கொண்டு விருத்தி செய்யப்பட்டுள்ளன.

மூலோபாயத் திசைகள் மற்றும் ஐந்து வருடத் திட்டத்தின் பால் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் தலைமைத்துவம் மற்றும் அதன் முகாமைத்துவக் குழுவினரால் மேற்கொள்ளப்படும் முயற்சியின் ஒரு பிரதிபலனாகும். இச் செயற்பாட்டினுள் பின்வரும் வினாக்களின் பால் கவனத்தினை செலுத்துவோம்

i. நிறுவன ரீதியாக நாம் யார்? தற்போதைய சூழலில் நாம் எவ்வகையில் பொருத்தமானவர்கள்?

ii. தற்போதைய போக்கினைக் கவனத்திற் கொள்ளும் போது எதிர்காலம் எவ்வாறு அமையப் போகின்றது?

iii. நிகழ்காலத்தில் எம்மிடம் காணப்படும் விடயங்களுக்கு மேலதிகமாக எம்மால் விருத்தி செய்து கொள்ளப்பட வேண்டிய புதிய திறன்கள் எவை?

iv. நாம் செல்ல வேண்டியிருப்பது எவ் இடத்தினை நோக்கி?

v. நாம் அவ்விடத்தினை எவ் வழியில் அடைந்து கொள்வது?

மேலே கூறப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிப்பதன் மூலம் இந்த திட்டத்தின் இலக்கினை அடைந்து கொள்வதற்கு செல்ல வேண்டிய பாதையினை எடுத்துக் காட்டுகின்றது. ஆசியாவின் அரசத் துறை கற்றல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கை தொடர்பாக அதி சிறந்த மையமாக மாறுவதற்குரிய எதிர்பார்ப்பினை அடைந்து கொள்வதனை நோக்காகக் கொண்டு எம்மால் வழங்கப்படும் சேவைகள் மற்றும் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளின் தரத்தின் பால் அதிகளவு கவனம் செலுத்துவது அத்தியாவசியமாகும். மேலும், எமது இலக்கினை நோக்கிச் செல்லும் பயணத்தின் முன்னேற்றத்தினை அளவிடுவதற்காக அமைந்த விருப்பமும் இந்த குறிக்கோளினை அடைந்து கொள்வதற்கு அவசியப்படும் ஒரு காரணியாகும்.

9.2 புதிய டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்கள்ஃ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகம் செய்தல்.

9.2.1 அரச பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நிர்வாகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் அதன் முதல் உயர் தேசிய டிப்ளோமா பாடநெறி நிகழ்ச்சித்திட்டம் 2017 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டது. இந்த அரச பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நிர்வாகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமாவினை 14 மாதங்கள் பூராகவும் தொடரப்படும் பகுதி நேர பாடநெறியொன்றாக நடாத்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. அநேகமான அரச அமைப்புக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அலுவலர்கள் இப் பாடநெறியினைக் கற்பதற்காகப் பதிவினை மேற்கொண்டுள்ளார்கள்.

அரச பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நிர்வாகம் போன்ற விடயங்கள் தொடர்பாக அரசத் துறையின் முகாமைத்துவக் கோட்பாட்டு அறிவினை மேம்படுத்துதல் மற்றும் அதனை செயற்பாட்டில் கொண்டுவரும் போது அனுபவிக்கக்கூடிய சவால்களுக்கு உறுதியாக முகங்கொடுப்பதற்கு அவர்களுக்குப் பயிற்சியளிப்பதே இப் பாடநெறியினை நடாத்துவதன் நோக்கமாக அமைகிறது.

9.2.2 தேசியப் பாதுகாப்பு மற்றும் உலகளாவிய நிர்வாகம் (National Security and Global Governance)

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் சர்வதேசத் தொடர்புகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஆய்வுகள் போன்ற பாடங்களுடன் தொடர்பாக இலங்கையில் நிலவும் முதற் தரத்தில் விளங்கும் இரு உளவுத்துறை அமைப்புக்களான சர்வதேச ஆய்வுகளுக்கான பண்டாரநாயக்க மையம் மற்றும் பாத்பைன்டர் நிறுவனத்தின் (Bandaranaike Centre for International Studies (BCIS) and Pathfinder Organization) ஒத்துழைப்புடன் "தேசிய பாதுகாப்பு மற்றும் உலகளாவிய நிர்வாகம்" எனும் தலைப்பில் விரிவுரைத் தொடரொன்று இலங்கை நிர்வாக சேவைக்காக நடாத்தப்பட்டது. அதன் துவக்க உரையில் "உலகளாவிய நிர்வாக முன்னேற்றம்" (Progression of Global Governance) எனும் தலைப்பில் பங்களாதேஸின் உயர் ஸ்தானிகர் திரு. ரியாஸ் ஹம்துல்லாஹ் அவர்களினால் நடாத்தப்பட்டது.

9.2.3 இனத்தைக் கட்டியெழுப்பல் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு (Nation- Building and Social Integration)

சமாதானத்தினை ஏற்படுத்துதல், இணக்கப்பாட்டினை ஏற்படுத்துதல் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு போன்ற விடயங்களின் போது நிர்வாகி ஒருவரின் கடமையினை புரிந்து கொள்ளும் வகையில் இனத்தை கட்டியெழுப்புதல் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு தொடர்பான மொடியுல் இலங்கையின் விமானப் படை அதிகாரிகளுக்கு (SLAF officers) அறிமுகஞ் செய்யப்பட்டது. இம் மொடியுலுக்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் சமூக ஆய்வுகளுக்கான சர்வதேச மையம் (International Centre for Ethnic Studies) மற்றும் சர்வதேச ஆய்வுகளுக்கான பண்டாரநாயக்க மையத்தினால் (Bandaranaike Centre for International Studies) மேற்கொள்ளப்பட்டது.

9.2.4 வலுவாதார அபிவிருத்தி இலக்குகள், திறந்த அரச பங்கேற்பு மற்றும் பாலின சமத்துவம் குறித்த உணர்வுப்பூர்வமான அரச அலுவலர்கள்

வலுவாதார அபிவிருத்தி இலக்குகள், திறந்த அரச பங்கேற்பு (Open Government Partnership) மற்றும் பாலின சமத்துவம் குறித்த உணர்வுப்பூர்வமான அரச அலுவலர்கள் (Gender Sensitive Public Officers) போன்ற தலைப்புக்கள் தொடர்பான செயலமர்வொன்றினை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் சர்வதேச அபிவிருத்திக்காக அமைந்த ஐக்கிய அமெரிக்காவின் முகவர் நிலையத்தின்

(USAID) ஒத்துழைப்புடன் 2017 ஜூன் மாதம் நடாத்தப்பட்டது. செயலமர்வின் பிரதான நோக்கமாக அமைவது வலுவாதார அபிவிருத்தி இலக்குகள், திறந்த அரச பங்கேற்பு மற்றும் பாலின சமத்துவம் குறித்த உணர்வுப்பூர்வமான அரச அலுவலர்கள் போன்ற விடயங்கள் தொடர்பான அறிவு மற்றும் புரிதல்களை மேம்படுத்திக் கொள்வதாகும். 2017 ஆம் ஆண்டின் போது ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் 130 அலுவலர்கள் இச் செயலமர்வில் கலந்து கொண்டார்கள். குறித்த பிரிவுகளின் வல்லுநர்களால் விரிவுரைகள் நடாத்தப்பட்ட இச் செயலமர்வின் துவக்க நிகழ்வில் சர்வதேச அபிவிருத்திக்காக அமைந்த ஐக்கிய அமெரிக்காவின் முகவர் நிலையத்தின், பாதிப்புக்கு உட்பட்ட மக்கள் தொடர்பான அலுவலகப் (Office of Vulnerable Populations) பணிப்பாளர் செல்வி. Danielle Reiff அவர்கள் மற்றும் இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் செயலாளர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி திருமதி. Dhara Wijayatilake அவர்களும் கலந்து உரை நிகழ்த்தினார்கள்.

9.2.5 ஓய்வூதியக் கோப்புக்களைத் தயாரித்தல் தொடர்பான பயிற்சி

நீண்ட காலமாக நிலவி வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் ஓய்வூதியத் திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து ஓய்வூதியக் கோப்புக்களைத் தயாரித்தல் தொடர்பாக பயிற்சி நிகழ்ச்சித்திட்டத் தொடரொன்றினை அமைச்சின் முகாமைத்துவ மற்றும் முகாமைத்துவமற்ற பணியாட்தொகுதியினருக்கு நடாத்தப்பட்டது. இது வரை அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு, உள்நாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் ஏனைய அமைச்சுக்கள் சிலவற்றினதும் அலுவலர்கள் இப் பிரயோக பயிற்சியில் இருந்து நன்மைகளைப் பெற்றுக் கொண்டார்கள்.

9.2.6 சிரேஷ்ட முகாமையாளர்களுக்கான Toast Masters கழகங்கள்

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவக வரலாற்றில் முதற் தடவையாக, அமைச்சின் மேலதிகச் செயலாளர்களுக்கான அவர்களின் பேச்சுத் திறனை மேம்படுத்துவதற்காக Toast Masters கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் Regelia International மற்றும் அதனுடன் இணைந்து நடாத்தப்படும் இந் நிகழ்ச்சித்திட்டம் பாரியளவு வெற்றியினை ஈட்டித் தந்துள்ளதுடன், அலுவலர்களுக்கிடையில் பிரபல்யம் அடைந்து கொண்டிருக்கின்றது. இச் சேவையினை அதிகளவு மக்கள் குழுக்களிடம் கொண்டு செல்வதற்காக அதனை விரிவாக்கம் செய்வதற்காக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் அதில் கலந்து கொள்ளும் குழுவினருக்கான பொது மக்களை விளிக்கும் விதம், செவிமடுத்தல், கூட்ட நெறிமுறைகள் (meeting protocol), முன்வைப்புக்களின் போது தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தல் மற்றும் செயலமர்வுகள் மற்றும் சந்திப்புக்களின் போது மாநாடுகள் மற்றும் கூட்டங்களில் விளைத்திறன் மிக்க தொடர்பாடல் என்பன தொடர்பாக மற்றும் கல்விசார் சாதனங்கள் மற்றும் வளங்களை பாரிய அளவில் பயன்படுத்துவதற்கு வாய்ப்புக்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. அவ்வாறே, தொடர்பாடல், தலைமைத்துவம், சங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய தலைப்புக்கள் தொடர்பாக சிறந்த அறிவினை வழங்கும் மாதாந்த சஞ்சிகையொன்றினை Toastmaster கழகம் இலவசமாக பெற்றுக் கொடுக்கின்றது. இவ் வசதிகள் அரசத் துறையின் ஏனைய மட்டங்களுக்கும் கொண்டு செல்வதற்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் எதிர்பார்க்கின்றது.



9.2.7 தூரநோக்கினை ஏற்படுத்திக் கொள்வதற்கான விளையாட்டின் அடிப்படையில் அமைந்த பயிற்சிகள்

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் உதவியுடன் அரசத் துறைக்கான தூரநோக்குகள் மற்றும் புத்தாக்கம் தொடர்பான பயிற்சி மொடியுலொன்றினை மற்றும் செயலமர்வினை மேம்படுத்தியுள்ளது.



அரசத் துறையின் அவசியப் பாட்டிற்கு ஏற்ப உசிதமான வகையில் தயார்படுத்தப்பட்டுள்ள இச் செயலமர்வுகள், நாட்டின் வலுவாதார அபிவிருத்திச் செயற்பாட்டினை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்காக இலங்கை நிர்வாகச் சேவையின் சேவை புதுமுகப் பயிற்சியினைப் பெறும் அலுவலர்கள் மற்றும் அச் சேவையின் ஐ ஆம் வகுப்பு அலுவலர்களை வலுப்படுத்தும் மற்றும் ஈடுபடுத்தும் நோக்குடன் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினுள் நடாத்தப்படுகின்றது. உலகளாவிய ரீதியாக இவ் விடயப் பரப்பெல்லையினுள் காணப்படும் வல்லுநர்களை ஒருங்கிணைத்து இந்தியாவின் Fields of View நிறுவனத்தின் மூலம் இச் செயலமர்வு நடாத்தப்படுகின்றது.

சுறுசுறுப்பினை ஏற்படுத்துதல் மற்றும் விரிவான அபிவிருத்தி தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்குரிய சந்தர்ப்பத்தினை ஏற்படுத்துவதனைப் போன்றே உற்பத்தித்திறன் தொடர்பான கொள்கைகளை வகுப்பதற்கு உதவும் வகையில் அபிவிருத்தி தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்கு பல்வேறு மாதிரிகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பது இலங்கைச் சூழலினுள் ஏற்புடையதாகும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள முகாமைத்துவ விளையாட்டுக்கள் மற்றும் பாவனைப் பயிற்சிகளின் மூலம் கலந்து கொள்வோருக்கு புரியச் செய்யும் வகையில் இப் பயிற்சிச் செயலமர்வு வடிவமைக்கப்பட்டுள்ளது.

9.2.8 நடமாடும் பயிற்சிப் பாடநெறிகள்

2017 - 2021 ஆம் ஆண்டின் மூலோபாயத் திட்டத்தின் மூலோபாயத் துவக்கமாக, இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் அதிகளவினருக்குப் பயன்களைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்தில் நடமாடும் பயிற்சிச் சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் கிழக்கு மாகாண சபையின் முகாமைத்துவ மற்றும் அபிவிருத்திப் பயிற்சி அலகின் (MDTU) ஒத்துழைப்புடன் திருகோணமலை மாவட்டத்தில் நடமாடும் பயிற்சிச் சேவையொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



9.2.9 ஓய்வூதியக் கோப்புக்களைத் தயாரித்தல் தொடர்பான பயிற்சி

அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் வேண்டுகோளின் பேரில், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் அமைச்சுக்கள் சிலவற்றின் அலுவலர்களுக்கான ஓய்வூதியக் கோப்புக்களைத் தயாரித்தல் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

9.3 ஆராய்ச்சிகளின் துவக்கம்

9.3.1 "சந்தரணீ ஆராய்ச்சி மையம்" ஒன்றை நிறுவுதல்



அரசத் துறை அலுவலர்களினால் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளுக்கான அதி நவீன வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்துடன் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் சந்தரணீ ஆராய்ச்சி மையம் நிறுவப்பட்டுள்ளது. ஆய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் அவற்றிற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற நடவடிக்கைகள் மற்றும் ஏனைய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையங்களுடன் வலையமைப்பினை ஏற்படுத்திக் கொள்வதற்கு இம் மையம் திட்டமிட்டுள்ளது. அவ்வாறே, ஆதாரங்களின் அடிப்படையில் கொள்கை வகுத்தலை மேற்கொள்ளல் சான்றுப்படுத்துதல் போன்றவற்றிற்காக ஆராய்ச்சிகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ள விடயங்கள் கொள்கை வகுப்பாளர்களிடம் கொண்டு செல்வதற்கானத் தளமொன்றினை வழங்குவதற்கும் அது திட்டமிட்டுள்ளது.

9.3.2 ஆராய்ச்சி வெளியீடுகள்

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஆராய்ச்சிகள் இரண்டின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ள விடயங்களை உள்ளடக்கிய "Applied Research with Agency Partnership–Arriving at Better Policy Recommendations" என்ற தொனிப்பொருளில் வெளியீடொன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது.



- "விதாதா நிலையங்களின்" பயிற்சிகளில் உற்பத்தித்திறன் வாய்ந்த தொழில்நுட்பப் பரிமாற்றங்களைப் பயன்படுத்துதல்.
- நிலவுகின்ற தேசிய பாடசாலைகளின் பாடத் திட்டத்தில் கணிதப் பாடம் உரித்துடையதாக அமைவது எவ்வாறு என்பது பற்றி மற்றும் கணிதப் பாடத்தில் குறைந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதில் கற்பித்தல் மற்றும் கற்றல் முறைகளில் செல்வாக்குச் செலுத்துகின்றதா என்பது பற்றி.

9.3.3 இலங்கை ஆராய்ச்சியாளர்களுக்கு அவுஸ்திரேலியா அதி உயர் புலமைப் பரிசில் (யுயுகு) வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்.

அவுஸ்திரேலியாவின் அதி உயர் புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம், அவுஸ்திரேலியா அரசாங்கத்தின் வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் வர்த்தகத் துறை திணைக்களத்தின் நிதியுடன் மொனர்' பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் பணியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் இலங்கை அரசத் துறையின் இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டத் தொடராகும். 2016 ஆம் ஆண்டில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆராய்ச்சியாளர்கள் 15 பேர் பயன் பெற்றுள்ளார்கள் என்பதுடன் "இலங்கைப் பெண்களின் தொழில் முனைவு தொடர்பான அபிவிருத்தி" பற்றிய ஆராய்ச்சிகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள். இவ் அதி உயர் புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் அவ் அதியுயர் புலமைப் பரிசில் பெறுநர்களுக்கு மிகவும் சிறந்த எதிர்காலமொன்றினை இலங்கைக்கு ஏற்படுத்திக் கொடுப்பதனை நோக்கமாகக் கொண்டு ஆதாரங்களின் அடிப்படையில் அமைந்த கொள்கை வகுப்பிற்கு வெற்றிகரமான முறையில் ஒத்துழைப்பதற்காக அவசியப்படும் தத்துவார்த்த மற்றும் நடைமுறை ரீதியான பின்னணியொன்று ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

9.4 அரசத் துறை அலுவலர்களுக்கான வழிகாட்டல் / ஆலோசனை சேவைகளை துவங்குதல்.

அரசத் துறை அலுவலர்களிடம் ஏற்படும் மன அழுத்தத்தை நீக்கி நிறுவன ரீதியினைப் போன்றே தனிப்பட்ட வாழ்க்கையிலும் சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் அவர்களை வலுப்படுத்துவதன் மூலம் அவர்களினால் வழங்கப்படும் சேவைகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் அரசத் துறை அலுவலர்களுக்கு தொழில்சார் வழிகாட்டல்கள் / ஆலோசனைச் சேவைகளை வழங்குபவர்களுடன் இணைந்து அவர்களுக்கென ஆலோசனைச் சேவைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. இங்கு, தொழில்சார் ஆலோசனைச் சேவைகளை வழங்கும் அமைப்புக்கள் தொடர்பான தகவல்களை அலுவலர்களுக்கு வழங்கும் தளமாகவும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் விளங்கி வருகின்றது.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் துவங்கப்பட்ட இப் பணியானது இலங்கையின் அரச சேவை வரலாற்றின் ஒரு தனிப்பட்ட முயற்சியாகும்.

அலுவலர் தமக்குள் ஏற்படும் மன அழுத்தத்தில் இருந்து மீள்வதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுக்க முடியுமான தீர்ப்பளிக்கப்படாத, ஏற்றுக்கொள்ளல், புரிந்து கொள்ள முடியுமான மற்றும் ஆலோசனை ஆலோசகர் ஒருவருடன் மன அழுத்த சூழ்நிலைகளில் தமக்கு ஏற்படும் உணர்வுகள் தொடர்பாக நம்பிக்கையுடன் கலந்துரையாடுவதற்கு அரசத் துறை அலுவலர்களுக்கு இதன் மூலம் சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது என எதிர்பார்க்கப்படுகின்றது.

9.5 ISO தர நிலைச் சான்றிதழினைப் (ISO Quality Standards) பெற்றுக் கொள்வதற்கான துவக்கங்கள்

மேற்குறித்த நோக்கத்தினை அடைந்து கொள்வதற்காக நிகழ்ச்சித்திட்டப் பிரிவினால் 5 எஸ் முறைமை தொடர்பான கையேடொன்றினை மற்றும் அப்புறப்படுத்தக்கூடிய கொள்கை தொடர்பான கையேடொன்றினைத் தயாரித்தல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 5 எஸ் செய்ரி, செய்தோன், சேய்சோ, சேய்கெத்சு மற்றும் சித்சுகே (Seiri, Seiton, Seiso, Seiketsu and Shitsuke) என்பவற்றினை

நடைமுறைப்படுத்துவதற்காக அமைந்த பிரதான அவசியப்பாடுகள், 5 எஸ் தொடர்பான கையேட்டினுள் உள்ளடக்கிக் காணப்படுவதோடு இரண்டாம் கையேட்டின் மூலம் ஒவ்வொரு பிரிவின் மூலம் அவற்றின் பழைய மற்றும் தேவையற்ற கோப்புக்களை அப்புறப்படுத்தும் போது பின்பற்றப்பட வேண்டிய முறைமையொன்றும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டின் அரைவாசியாகும் போது குறித்த தரங்களை அடைந்து கொள்வதற்காக சகல பிரிவுகளையும் உள்ளடக்கி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. நீண்ட கால மற்றும் குறுகியக் கால நிகழ்ச்சித்திட்டங்களை உரிய வகையில் நடைமுறைப் படுத்தப்படுகின்றதா என்பது பற்றிய கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கண்காணிப்பு மாதிரிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க, இந் நிகழ்ச்சித்திட்ட வகைகள் இரண்டினதும் வரிசைமுறையான செயற்பாடுகள் காலத்துக்கு ஏற்ப மேற்கொள்ளப்படுவதனை சான்றுப்படுத்துகின்றது.

9.6 இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் எண்முறை அடிப்படையிலான அரச மனித வளத் திறன் விருத்தி மேம்பாட்டுச் செயற்திட்டத்தினை ஆரம்பித்தல்.

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப மனித வளத் திறன்விருத்திச் செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையங்களுடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளார்கள். இச் செயற்திட்டத்தின் நோக்கமாக அமைவது இலங்கையில் ஈ - அரச துவக்கத்தின் அடுத்தக் கட்டத்தினை நோக்கிப் பயணிப்பதற்காக அவசியப்படும் தொழில்நுட்பம் சார் உந்துதலை வழங்குவதற்காக அரசத் துறையின் சிரேஷ்ட அலுவலர்களின் தகவல் மற்றும் தொழில்நுட்ப இயலுமையினை விருத்தி செய்தலாகும்.

IV ஆம் பகுதி

தற்கால சவால்கள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள்

10.1 தற்கால சவால்கள்

சகல மட்டங்களிலுமான பணியாட்தொகுதியினரின் வெற்றிடம் மற்றும் பாடசாலையினுள் தகைமைகள் பெற்ற சிரேஷ்ட பணியாட்தொகுதியினரின் வெற்றிடம் - இப் பிரச்சினையை 2017 ஆம் ஆண்டினுள் ஓரளவு தீர்ப்பதற்குக் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், வெற்றிடங்கள் சிலவற்றினை நிரப்புவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. எஞ்சிய வெற்றிடங்களின் அளவினை 2018 ஆம் ஆண்டினுள் நிரப்ப வேண்டியுள்ளது. எவ்வாறிருந்த போதிலும், ஏனைய கல்வி நிறுவனங்களுடன் ஒப்பிடும் போது இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் வழங்கப்படும் ஊதியங்கள் மற்றும் ஏனைய நலன்கள் கவர்ச்சிகரமற்றுக் காணப்படுவதனால் அதன் உள்ளகப் பாடசாலைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக அனுபவம்மிக்க மற்றும் பிரபல்யமான அறிஞர்களை ஈர்த்துக் கொள்வதற்கு முடியாமல் உள்ளது. அவ்வாறே, அரசத் துறையின் சிரேஷ்ட மற்றும் அனுபவம்மிக்க அலுவலர்கள் இரண்டாம் நிலை அடிப்படையில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்துடன் இணைத்துக் கொள்வதற்கு விருப்பமற்றுக் காணப்படுவது நேரொத்த அலுவலர்களுக்கு உரித்துடையதாகும் உரிமைகள் / நலன்களுக்கு உரித்தான பதவிக்குரிய தகைமைகள் காணப்படாமையாகும். (பொதுத் திறைசேரியின் பொருள் கோடலுக்கு ஏற்பவாகும்)

போதியளவு வகுப்பறை வசதிகள் காணப்படாமை - பயிற்சிக்காக அதிகளவு குழுக்கள் வருகை தரும் மாதங்களின் போது நிலவும் வகுப்பறைகளின் எண்ணிக்கைகளின் மூலம் அவ் அனைத்து பயிற்சித் தேவைகளையும் பூர்த்தி செய்வதில் சவாலொன்றினை முகங்கொடுத்து வருகின்றார்கள். இப் பிரச்சினையை தீர்ப்பதற்காக பயன்படுத்தப்படும் மூலோபாயங்களாக பயிற்சி அமர்வுத் தொடர்களின் நேர அட்டவணையினை மீள தயார்படுத்தப்பட வேண்டியுள்ளது. மேலும், தற்போதைய கோரிக்கைகளுக்கு ஏற்ப வகுப்பறை வசதிகளை மேம்படுத்தும் அவசியப்பாடும் எழுந்துள்ளது. 2017 ஆம் ஆண்டின் போது ஒரு சில வகுப்பறைகளின் தரங்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது எஞ்சிய வகுப்பறைகளின் நிலைமைகளை விருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

10.2 எதிர்காலத் திட்டம்

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் எதிர்காலத் திட்டம் அதன் 2017 - 2021 ஆம் ஆண்டுக்குரிய மூலோபாயத் திட்டத்தின் மூலம் காட்டப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டிற்கான திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் / இலக்குகளை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

பிரதான நோக்கங்கள் 5 இன் கீழ் 2017 - 2021 ஆம் காலப் பகுதிக்கான உத்தேசிக்கப்பட்ட மூலோபாயத் திட்டங்களின் துவக்கங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

இலக்கு 1: கற்கை மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை வழங்குதலின் மூலம் அரசத் துறையின் இயலளவினை விருத்தி செய்தல்.

மூலோபாய முயற்சிகள்:

- தற்போது காணப்படும் நிறுவனங்களில் இருந்து பங்கேற்பாளர்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்காக, மேலும் கற்றல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் திரும்ப கலந்து கொள்வதற்கு விருப்பத்தினைத் தெரிவிக்கும் வாடிக்கையாளர் தளத்தை உருவாக்குவது அவசியமாகும்.
    - புள்ளிகளின் மீது தொழிற்படும், தொழில் ஆதரவு உறுப்பினர்களுடன் கூடியதொரு தொடர்ச்சியான கற்றல் மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தை வடிவமைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல். சேவை வழங்குநர்களின் தொடர்ச்சியான கற்றல் மற்றும் மேம்பாட்டு முயற்சிகளையும் இனங்கண்டு கொள்ளும் அவ்வாறான நிகழ்ச்சித்திட்டமொன்றினை சேவை வழங்குநர்களிடம் பிரபல்யப்படுத்துதல்.
    - பழைய மாணவர்களுக்காக வழக்கமான அடிப்படையில் தற்காலத் தலைப்புக்களின் கீழ் கலந்துரையாடல்களை நடாத்துதல்.
    - அரச சேவைக்கு அவசியப்படும் திறமைகளைப் பூர்த்தி செய்வதற்காக பயிற்சித் தேவைகள் பகுப்பாய்வு அடிப்படையில் அமைந்த புதிய நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல்.
- புதிய வாடிக்கையாளர் குழுவிடம் இருந்து பங்கேற்பாளர்களைப் பெற்றுக் கொள்ளல்.
    - அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்குக் கற்றல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை தொடங்குதல்
    - பயிற்சி மற்றும் அபிவிருத்தித் தொடர்பான நடமாடும் சேவைகளை திட்டமிடல் மற்றும் செயற்படுத்துதல்.
- புதிய நிகழ்ச்சித்திட்டங்களுக்கான குழுக்களை பங்கேற்கச் செய்தல்
    - வேண்டுகோளின் அடிப்படையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை விருத்தி செய்தல்
    - புதிய பட்டப்படிப்பு, உயர் தேசிய மற்றும் டிப்ளோமாப் பாடநெறி நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குதல்.
    - நிகழ்நிலைப்படுத்தப்பட்ட தளங்களுக்கு சமகால கற்றல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை விருத்தி செய்தல்.

இலக்கு 2: குறித்த நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட, அரசக் கொள்கை மற்றும் அரச நிர்வாகத்துடன் தொடர்புடைய ஆராய்ச்சிக் குறிப்புக்களைக் கொண்ட களஞ்சியமொன்றினை விருத்தி செய்தல்.

மூலோபாய முயற்சிகள்:

- பின்வரும் விடயங்களின் மூலம் ஆராய்ச்சிச் சூழலை மேம்படுத்துதல்
    - இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினுள் ஒரு முழுமையான ஆராய்ச்சி மையத்தை நிறுவுதல்
    - ஆராய்ச்சியாளர்களைக் கொண்ட குழாத்தினை நிறுவுதல்.
    - தேசிய கண்ணோட்டத்துடன் விளைத்திறனான ஆராய்ச்சி விடயப் பரப்பெல்லைகளை இனங்காணல்.

- ஆராய்ச்சிகளில் ஈடுபடும் ஏனைய பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையங்களுடனும் (R&D) இணைந்து பணியாற்றுதல்.
- நிதியளிக்கும் முகவர் நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- ஆராய்ச்சிகள் மூலம் கண்டுபிடித்த விடயங்களுக்கு உரித்தான கொள்கை உருவாக்கத்தினை நிறுவனங்களில் விரிவாக்கம் செய்தல்.

இலக்கு 3: அரசத் துறை நிறுவனங்கள் மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களினால் வழங்கப்படும் சேவைகளின் உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக நிறுவன ரீதியான அபிவிருத்திச் சேவைகளை நடைமுறைப்படுத்துதல்.

மூலோபாய முயற்சிகள்:

- அனைத்து அரச நிறுவனங்கள் மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களில் முடிவெடுக்கும் நபர்களுடன் உரையாடலொன்றினைத் தொடங்குதல் மற்றும் நிறுவனத்தின் வளர்ச்சித் தேவைகளை மதிப்பீடு செய்தல்.
- இனங்காணப்பட்ட பயிற்சித் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு உசிதமான பயிற்சித் திட்டங்களை வடிவமைத்தல் மற்றும் செயற்படுத்துதல்.

இலக்கு 4: இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் வழங்கப்படும் சேவைகளுக்கான அதிகக் கேள்விகளை ஏற்படுத்தும் வகையில் அதன் பங்குதாரர்களினுள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் தொடர்பான நேர்மறையான பிம்பத்தை ஏற்படுத்துதல்

மூலோபாய முயற்சிகள்:

- முறைசார்ந்த மற்றும் தொடர்ச்சியான அடிப்படையில் ீசு கட்டுரைகளை வெளியிடல்
- தொடர்ந்தேர்ச்சியாக இணையத்தை நாளதுவரைப்படுத்துதல்
- சமூக ஊடகங்களைப் பயன்படுத்துதல்
- முகாமைத்துவ தகவல் தொகுதி / தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் ஊடாக சேவைப் பெறுநர்கள் அவர்களுடன் இலகுவாக தொடர்புபடுதல்.

இலக்கு 5: எதிர்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நிறுவனங்களின் உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துதல்.

மூலோபாய முயற்சிகள்:

- **உற்பத்தித்திறன் மிக்க முடிவுகளை எடுப்பதற்கு வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தும், இலக்கினை அடிப்படையாகக் கொண்ட முகாமைத்துவத் தகவல் முறைமையினை நிறுவுதல்**
  - கற்றல் மற்றும் அபிவிருத்திப் பணியில் வளர்ந்து வரும் எண்முறைப் (டிஜிட்டல்) பரிமாற்றச் செயற்பாட்டிற்கு உசிதமான வகையில் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை கண்டறிதல் மற்றும் நிறுவுவதல்
  - காலத்துக்கு ஏற்ற மற்றும் உற்பத்தித்திறன் மிக்க முடிவுகளை எடுப்பதற்கு முகாமைத்துவ உதவியினை இலக்காகக் கொண்டு முகாமைத்துவத் தகவல் முறைமையொன்றினைத்

திட்டமிடல் மற்றும் செயற்பாட்டிற்கு கொண்டு வருவதற்காக செயலாற்றுகை படையணியினை நிறுவுதல்.

- **சிரேஷ்ட அரச ஊழியர்களை இணைத்துக் கொண்டு ஆலோசனைச் சேவையினை ஏற்படுத்துதல்.**
  - அரசத் துறை அலுவலர்களுக்கு ஆலோசனை மற்றும் தொழில்சார் வழிகாட்டல் சேவைகளை வழங்குதல்
  - ஆலோசனை மற்றும் தொழில்சார் வழிகாட்டல் அமர்வுகளை நடாத்துதல்
  - விடயப் பரப்பில் பரந்த அளவினை உள்ளடக்கிய திறமைவாய்ந்த பாரம்பரிய மற்று தொழில்சார் பணியாட்தொகுதியினரைக் கொண்ட விரிந்த வளக் குழாத்தினை நிறுவுதல்.
  - தகுதிவாய்ந்த உள்ளக மனித வளங்களை ஆட்சேர்ப்புச் செய்தல்
  - மேலும் விருத்தி செய்யப்பட வேண்டியவை என இனங்காணப்பட்ட அறிவு மற்றும் திறமைகளை அடிப்படையாகக் கொண்டு வெளிவாரியான வளவாளர்களை அடையாளங் காணல் மற்றும் அவர்களிடமிருந்து சேவைகளைப் பெற்றுக் கொள்ளல்.

- **கற்றல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை விருத்தி செய்வதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.**
  - ஆராய்ச்சி மையத்தை நிறுவுதல்
  - நூலகத்தை உயர் தரத்துக்குக் கொண்டு செல்லல் மற்றும் அதனை நவீனமயப்படுத்துதல்
  - விரிவுரை மண்டபங்களை உயர் தரத்துக்குக் கொண்டு செல்லல்
  - விடுதி வசதிகளை மேம்படுத்துதல்
  - நலன்புரிச் சேவைகள் மற்றும் வசதிகளை விரிவாக்கம் செய்தல் மற்றும் பல்வகைப்படுத்தல்.
  - நுவரெலியாவில் அமைந்துள்ள வளாகத்தில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவக பல்கலைக்கழகத்தினை (SLIDA Campus) நிறுவுதல் (பிராந்திய அபிவிருத்தி)

- **கற்றல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டப் பணியில் எண்முறை (டிஜிட்டல்) அடிப்படைக்கு உசிதமான வகையில் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை இனங்காணல் மற்றும் நிறுவுதல்**
  - டிஜிட்டல் உள்ளடக்கத்தின் களஞ்சியத் திறனை விரிவுபடுத்தல்
  - இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் நிகழ்நிலை (online) சேவைகளுக்கான தொலைக் காப்பு அமைப்பினை (remote backup system) இனை நிறுவுதல்
  - இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் வாடிக்கையாளர்களுக்கு நிகழ்நிலை (online) கட்டண முறையை உருவாக்கல்
  - 60 பேருக்கான இட வசதிகளை வழங்கும் வகையில் தகவல் தொழில்நுட்பப் பயிற்சி அறையினை விரிவு படுத்துதல்
  - நவீன பயிற்சி உபகரணங்கள் மற்றும் கருவிகளுடன் பயிற்சி அறைகளை நவீனமயப்படுத்தல்
  - பயிற்சிக்காக அவசியப்படும், அனுமதிப் பத்திரத்துடன் கூடிய மென்பொருட்களின் புதிய பதிப்புக்களை நிறுவுதல்.

- ஏற்கனவே காணப்படும் உள்ளூர்ப் பகுதி வலையமைப்பு (LAN) மற்றும் மற்றும் பரந்த பகுதி வலையமைப்பு (WAN) மீளவும் கட்டமைத்தல் மற்றும் விரிவுபடுத்தல்.
- தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ அமைப்பினை செயல்படுத்தல்

- **தொழில்நுட்பம் மற்றும் அறிவினை பரிமாற்றம் செய்தல் மற்றும் ஒத்துழைப்புடனான ஆராய்ச்சிக்கான உள்ளூர் / வெளிநாட்டு நிறுவனங்களுடன் தொடர்ச்சியாகக் கூட்டிணைந்து செயற்படுதல்.**
  - தொழில்நுட்பம் மற்றும் அறிவினை பரிமாற்றம் செய்தல் மற்றும் ஒத்துழைப்புடனான ஆராய்ச்சிக்கான வெளிநாட்டு நிறுவனங்களுடன் தொடர்ச்சியாகக் கூட்டிணைந்து செயற்படுதல்.
  - தற்போதைய மற்றும் எதிர்கால மனித வள அபிவிருத்தி மற்றும் ழனு அவசியப்பாட்டினை இனங்கண்டு கொள்ளும் நோக்கத்துடன் உள்நாட்டு தரப்பினர்களுடன் உரையாடல்களை தொடருதல்.
  - தொழில்நுட்பம் மற்றும் அறிவினை பரிமாற்றம் செய்தல் மற்றும் ஆராய்ச்சிக்காக வெளிநாட்டு முகவர் நிலையங்களுடன் ஒத்துழைப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளல்.

V ஆம் பகுதி

குயெலெயைட சுநஎநைறள

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம்
நிதி நிலைமை தொடர்பான அறிக்கை
2017 திசெம்பர் மாதம் *31* ஆந் திகதியன்று

	குறிப்புகள்	*2017*	*2016*
சொத்துக்கள்		**ரூபா. சதம்**	**ரூபா. சதம்**
நடப்புச் சொத்துக்கள்			
வங்கி நிலுவை	***03***	4,051,951.91	60,174,245.55
வைப்பிலிடாத ரசீதுகள்		120,376.50	-
3 மாத வைப்புக்கள்	***04***	268,046,188.01	248,069,033.43
வரவுகள்	***05***	36,800,695.54	46,177,612.55
கையிருப்பு	***06***	3,097,579.47	3,382,999.45
முன் கொடுப்பனவு	***07***	4,931,816.97	2,962,861.70
முற்பணக் கொடுப்பனவு	***08***	5,715,120.34	1,138,741.99
ஊழியர்க் கடன்கள்	***09***	15,036,793.34	14,291,849.81
		337,800,522.08	376,197,344.48
நடப்பற்ற சொத்துக்கள்			
சொத்து, இயந்திரக மற்றும் உபகரணங்கள்	***10***	412,427,321.74	403,822,196.37
பணிக்கொடை நிதியினை முதலீடு செய்தல்	***11***	31,591,567.42	28,522,408.40
வைப்புக் கணக்கு	***12***	1,299,500.00	1,299,500.00
		445,318,389.16	433,644,104.77
மொத்த சொத்துக்கள்		***783,118,911.24***	***809,841,449.25***
பொறுப்புக்கள்			
தற்போதைய பொறுப்புகள்			
செலுத்த வேண்டிய வைப்புக்கள்	***13***	23,151,896.28	50,620,174.65
முற்பணக் கொடுப்பனவு ரசீதுகள்	***14***	79,421,201.83	138,510,095.33
பெருகிய செலவு	***15***	19,985,653.00	7,828,233.88
நிச்சயமற்ற பெறுதல்களுக்கான ஒதுக்கீடு		3,221,450.00	1,745,050.00
		125,780,201.11	198,703,553.86
நடப்பற்ற பொறுப்புக்கள்			
வறையறுக்கப்பட்ட தொலைதூரக் கற்றல் நிலையம்	***16***	24,825,882.55	26,480,941.38
பணிக்கொடைக்காக ஒதுக்குதல்	***17***	28,994,006.20	29,107,585.00
		53,819,888.75	55,588,526.38
மொத்த பொறுப்புக்கள்		179,600,089.86	254,292,080.24
நிகர சொத்துக்கள்		***603,518,821.38***	***555,549,369.01***
நிகர சொத்துக்கள் / மூலதனம்			
ஒத்திவைக்கப்பட்ட வருமானம் – திறைசேரி உதவித்தொகை		514,054,873.20	***478,753,816.81***
ஏனைய கையிருப்பு – சொத்துக்களின் மறு மதிப்பீடு	***18***	12,015,807.00	***12,015,807.00***
திரட்டப்பட்ட உபரி / பற்றாக்குறை	***19***	77,448,141.18	***64,779,745.20***
மொத்த நிகர சொத்துக்கள் / மூலதனம்		***603,518,821.38***	***555,549,369.01***

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம்

நிதிச் செயல்திறன் தொடர்பான அறிக்கை

***2017* திசெம்பர் மாதம் *31* ஆந் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான**

	குறிப்புகள்	*2017* ரூபா. சதம்	*2016* ரூபா. சதம்
வருமானம்			
திறைநேரியில் இருந்து கிடைக்கப்பெற்ற பங்களிப்பு	***20***	134,878,943.61	158,292,480.58
ஏனைய வரமானங்கள்			
பாடநெறிக் கட்டணம்	***21***	4,802,662.00	5,312,052.20
மண்டபங்களுக்கான வாடகை		6,370,175.00	4,342,900.00
வெளியீடுகளின் விற்பனை		618,280.00	1,417,174.00
முதலீடுகளிலிருந்து கிடைத்த வருமானம்	***22***	31,944,464.48	23,820,433.69
கடன்களில் இருந்து கிடைக்கப்பெற்ற வட்டி		626,400.73	557,637.75
வாடகை	***23***	8,522,121.13	11,773,851.51
வாடகைக்கான குத்தகை		1,655,058.33	1,655,058.83
நன்கொடை (UNDP)		3,871,700.36	-
பட்டப்பின் கற்கைக்கான பாடசாலை		20,679,500.02	24,217,500.00
மொழி சார்ந்த நிகழ்ச்சித்திட்டம்		7,104,450.00	12,493,451.36
ஆலோசனைச் சேவைகள்	***24***	137,482,019.51	113,014,845.55
பலவித வருமானம்	***25***	4,142,770.91	7,590,191.33
மொத்த வருமானம்		***362,698,546.08***	***364,487,576.80***
செலவுகள்			
தனிப்பட்ட ஊதியங்கள்	***26***	87,053,813.18	90,032,742.51
ஊழியர்கள் நலன்புரி	***27***	4,794,399.71	3,276,757.46
பிழைப்பூதியப் படிகள் மற்றும் பயணங்கள்	***28***	9,260,683.06	1,706,344.54
பயன்பாடு மற்றும் ஏனைய சேவைகள்	***29***	35,393,023.40	33,621,629.73
போக்குவரத்து	***30***	4,847,841.41	5,399,301.19
நிலையான சொத்துக்களின் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு	***31***	7,517,313.15	11,116,306.76
பொருட்கள் மற்றும் தேவைகள்	***32***	10,910,556.37	8,680,881.14
நிதிக் கட்டணங்கள்	***33***	4,383,941.00	3,795,310.06
நூலகச் சேவைகள்	***34***	364,945.00	395,959.03
பயிற்சி மற்றும் மதிப்பீடு	***35***	7,743,538.45	15,398,472.29
வெளியீடு மற்றும் தகவல் சேவைகள்	***36***	208,054.00	485,364.90
வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் கல்விச் சுற்றுலாக்கள்		46,413,155.28	-
தேய்மானங்கள்	***37***	37,148,051.70	36,174,757.79
பட்டப்பின் கற்கைக்கான பாடசாலை	***38***	5,630,763.15	10,133,163.48
ஆங்கில மொழி நிகழ்ச்சித்திட்டம்	***39***	2,859,500.00	3,112,662.64
ஆலோசனைச் சேவைகள்	***40***	65,751,394.79	64,311,155.35
இழப்புக்கள் மற்றும் தள்ளுபடிகள் -TOT		11,736,078.22	-
பணிக்கொடை வழங்குதல்		2,513,632.70	915,984.75
நிச்சயமற்ற வரவுகளுக்கான ஒதுக்கீடு		1,476,400.00	1,150,100.00
வெளியீடுகளுக்கான செலவுகள்		650,808.00	705,461.00
மொத்தச் செலவுகள்		***346,657,892.57***	***290,412,354.62***
கால எல்லைக்கான உபரி / (பற்றாக்குறை)		***16,040,653.51***	***74,075,222.18***

VI ஆம் பகுதி

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மற்றும் மறுமொழிகள்

கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

இலக்கம் PED 55, இனைக் கொண்ட பொது தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு ஏற்ப, கணக்காய்வுக் குழு, அக் குழுவிற்கு தலைமைத்துவம் வகிக்கும் திறைசேரியின் பிரதிநிதிகள் உட்பட சுயாதீன நிறைவேற்று அல்லாத நிர்வாகக் குழு அங்கத்தவர்கள் (4) நான்கு பேரினை உள்ளடக்கிக் காணப்படுகின்றது.

2017 ஆம் ஆண்டிற்கான நிர்வாகக் குழுவினால் நியமிக்கப்பட்ட கணக்காய்வுக் குழு அங்கத்தவர்களின் பெயர்ப் பட்டியல் கீழ்வருமாறு காட்டப்பட்டுள்ளது:

திரு.கே.டி.என்.ஆர். அசோக	பணிப்பாளர் நாயகம், பொது தொழில்முயற்சிகள் திணைக்களம் (தலைவர் - 2017 சனவரி மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை)
திரு.பி.பீ.எஸ்.சீ. நோனிஸ்	கட்டுப்பாட்டாளர் நாயகம் / குழுவின் தலைவர் (தலைவர் - 2017 செப்டம்பர் மாதம் முதல்) கட்டுப்பாட்டு நாயகத்தின் அலுவலகம், நிதி அமைச்சு
திரு. கமல் பத்மசிறி	செயலாளர், மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சு
திரு.கே.டீ.டீ.கே. டீ. ஆப்ஷரூ	ஆளுகைச் சபையின் அங்கத்தவர்
திரு.டீ.ஏ.வீ. மஹேந்திர ரத்னசேகர	ஆளுகைச் சபையின் அங்கத்தவர்

கூட்டங்கள்

2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான குழுவின் செயலாளராக உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டார். அவ் வருடத்தினுள் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நான்கு (4) நடாத்தப்பட்டுள்ளதோடு, கணக்காய்வுக் குழுக் கூட்டத்தின் அறிக்கையை சபைக்கு தினந்தோறும் அனுப்பப்பட்டுள்ளது. கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களத்தின் பிரதிநிதியான கணக்காய்வு அலுவலர் திரு. எம்.ஆர்.ஆர்.கே. மல்லவ அவர்கள் கண்காணிப்பாளராகக் கலந்து கொண்டார். அதற்கு மேலதிகமாக, அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் கண்காணிப்பாளராகக் கலந்து கொண்டார். விசேடமான விடயங்களின் போது கணக்காய்வுக் குழுவுக்கு ஆலோசனைகள் வழங்குவதற்காக பணிப்பாளர் நாயகம் மற்றும் சிரே‘ட முகாமைத்துவ அலுவலர்கள் வரவழைக்கப்பட்டு இருந்தார்கள்.

2017 ஆம் ஆண்டினுள் நான்கு (4) சந்தர்ப்பங்களின் போது கணக்காய்வுக் குழுவினர் கூட்டங்களைக் கூடியதோடு, அவர்களின் வருகை தொடர்பான விபரங்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

பெயர்	2017			
	மார்ச் மாதம் 24 ஆந் திகதி	ஜூன் மாதம் 21 ஆந் திகதி	ஆகஸ்ட் மாதம் 22 ஆந் திகதி	நவம்பர் மாதம் 16 ஆந் திகதி
திரு. ரஞ்சித் அசோக்க அவர்கள் (முன்னாள் தலைவர்)	√	√	√	
திரு.பி.பீ.எஸ்.சீ.நோனிஸ் அவர்கள்				√
திரு. கமல் பத்மசிறி	-	√	√	-
திரு.கே.டீ.டீ.கே. டீ. ஆப்ஷரூ	√	√	√	√
திரு.டீ.ஏ. விஜித் மஹேந்திர ரத்னசேகர	√	√	√	√

கட்டளைகள் மற்றும் பணிகள்

குழுவின் விடய ஆய்வெல்லை, இலக்கம் PED 55 மற்றும் 2010.12.14 ஆந் திகதிய பொது தொழில் முயற்சிகள் சுற்றறிக்கைக்கு ஏற்ப வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது. நிதி அறிக்கையிடல், உள்ளக நிர்வாகம், உள்ளக மற்றும் வெளிவாரியான கணக்காய்வுகள் என்பன தொடர்பாக ஆளுகைச் சபையின் பொதுவான தொலைநோக்கின் இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு குழுவின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றது.

விடய ஆய்வெல்லை

இலக்கம் PED 55 இனைக் கொண்ட பொது தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிராகாரம் ஆளுகைச் சபையின் அங்கத்தவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள உரிய விடய ஆய்வெல்லையின் மூலம் குழு கட்டுப்படுத்தப்படுகின்றது. விடய ஆய்வெல்லை மற்றும் அரசின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ற வகையில் தமது பொறுப்புக்களை நிறைவேற்றும் போது பின்வரும் இலக்குகளின் பால் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பொறுப்புக்களை உறுதிப்படுத்துதல் மற்றும் வருடாந்தக் கணக்காய்வுத் திட்டங்களை மீளாய்வு செய்தல்.
- நிறுவனத்தின் அனைத்து நடவடிக்கைகளினதும் உள்ளக கட்டுப்பாட்டு அமைப்புக்களின் மீளாய்வு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.
- செலவுகளின் விளைத்திறனிற்காக மற்றும் வீணான செலவுகளை அகற்றுதல் போன்றவற்றிற்காகவும் உரிய கால இடைவெளிகளின் போது செயலாற்றுகையின் மீளாய்வு செய்தல்.
- வெளிவாரியான கணக்காய்வாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுதல் மற்றும் கணக்காய்வாளரின் / வெளிவாரியான கணக்காய்வாளர்களின் முகாமைத்துவக் கடிதங்கள் தொடர்பாக தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- பிரமாணங்கள், ஒழுங்கு விதிகள், சட்டதிட்டங்கள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு ஏற்புடையதாகும் என்பதனை உறுதிப்படுத்துதல்.

- கணக்கியல் தர நிலைகளுக்கு ஏற்ப இணங்கியுள்ளதா என்பது பற்றி உறுதிப்படுத்துவதற்காக நிதி அறிக்கையினை மீளாய்வு செய்தல்.
- உள்ளகக் கணக்காய்வு / வெளிவாரிக் கணக்காய்வு அறிக்கைகளின், முகாமைத்துவ கடிதங்களை மீளாய்வு செய்து குறைகளுக்கான தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- பொது தொழில் முயற்சிகள் தொடர்பான பொதுக் குழுவின் பரிந்துரை / கட்டளையினை நடைமுறைப்படுத்துதல் மற்றும் மீளாய்வு செய்தல்.
- குழுவினால் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய, செயற்பாட்டில் கொண்டு வரவேண்டிய மற்றும் மேம்படுத்திக் கொள்ளப்பட வேண்டிய வகையில் இனங்காணப்பட்டுள்ள எந்தவொரு விடயத்தினையும் ஆளுகைச் சபைக்கு அறிக்கையிடல்.
- வருடாந்த அறிக்கையில் உள்ளடக்குவதற்காக குழுவின் கண்டுபிடிப்புக்கள் தொடர்பான அறிக்கையினை தயார்படுத்துதல்.

நிதியியல் அறிக்கை

வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் தகவல்களின் உண்மைத் தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக நிதியியல் அறிக்கைத் தொகுதியினை விளைதிறன் மிக்கதாக குழுவினால் மீளாய்வு செய்யப்படுகின்றது. கணக்குப் புத்தகங்கள் மற்றும் இலங்கை கணக்கியல் தரங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிதிக் கூற்றினைத் தயாரிப்பதற்காக ஆளுகைச் சபையிடம் காணப்படும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு குழுவானது ஆளுகைச் சபைக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றது. சகல கொடுக்கல் வாங்கல்களும் சரியானதும் முழுமையானதுமாக கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்யப்படுவதாக நியாயமான சான்றிதழொன்றினை வழங்குவதற்காக உள்ளக நிர்வாகத் தொகுதியின் மற்றும் செயன்முறை ஒழுங்கு விதிகளின் போதுமான அளவு மற்றும் உற்பத்தித்திறன் மிக்கதாக குழுவினால் மீளாய்வு செய்யப்படுகின்றது.

குழுவினால் சகல மூன்று மாதங்களுக்கான கணக்காய்வு செய்யப்படாத நிதியில் அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் நிதி அறிக்கையினை தயார்படுத்தும் போது மேற்கொள்ளப்பட்ட முக்கியமான அனுமானங்கள் மற்றும் தீர்ப்புக்களை உள்ளடக்கி துணைத் தகவல்கள் மீளாய்வு செய்யப்படுகின்றன.

உள்ளக நிர்வாகம்

கணக்காய்வுக் குழுவின் மூலம் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிய நிதி அறிக்கையின் போது உள்ளக நிர்வாகத்தில் காணப்படும் உற்பத்தித்திறன் வாய்ந்த மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இச் செயற்பாட்டின் மூலம் உள்ளக நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இசைந்து செல்வதனை சான்றுப்படுத்துவதற்காக நிலவுகின்ற அவதானங்களை நிர்வகித்தற் செயற்பாடுகளுக்குப் போதுமான தன்மை மற்றும் உற்பத்தித்திறன் வாய்ந்த தன்மை என மதிப்பீடு செய்யப்படுகின்றது. உள்ளகக் கணக்காய்வாளர்களினால் வழங்கப்படும் பரிந்துரைகளின் அடிப்படையில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் உள்ளக நிர்வாகத் தொகுதியின் விளைத்திறன் தன்மையினை மேம்படுத்துவதற்காக முகாமைத்துவத்தினால் உசிதமான செயற்பாடு எடுக்கப்படுவதாக குழுவினால் உறுதிப்படுத்தப்படுகின்றது. உள்ளக நிர்வாக கட்டமைப்பினை அடிப்படையாகக் கொண்டு ஆளுகைச் சபைக்கு அதன் பணிகளை தொடர்ச்சியாக நிறைவேற்றிச் செல்வதற்கு மற்றும் அவசியப்படும் நடவடிக்கைகளை எடுப்பதற்கான இயலுமையினையும் பெற்றுக் கொடுக்கின்றது.

உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு செய்யப்படும் செயற்பாடுகளில் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் சுதந்திரமாக நிறைவேற்றப்படுவதாகவும் பக்கச் சார்பின்றி மற்றும் உரிய தொழில்சார்ந்த வகையில் மேற்கொள்ளப்படுவதாகவும் கணக்காய்வுக் குழு உறுதிப்படுத்துகின்றது. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் உள்ளக நிர்வாகப் பிரிவின் செயற்பாடுகளின் விடயப் பரப்பெல்லை, வளங்கள், நோக்கங்கள் மற்றும் விளைத்திறன் என்பன கணக்காய்வுக் குழுவினால் மேற்பார்வை செய்யப்படுவதுடன் மீளாய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

பி.பீ.எஸ்.சீ.நோனிஸ்
தலைவர்
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

SLIDA

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය எனது இல. My No. } ඊඑච්ඒ/සී/එස්එල්ඉඒ/එප්එස්/1/2017/05

මගේ අංකය உமது இல. Your No. }

දිනය திகதி Date } 2018 ඔක්තෝබර් 16

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை அபிவருத்தி நிருவாக நிறுவகம்

இலங்கை அபிவருத்தி நிருவாக நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதிஅதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

இலங்கை அபிவருத்தி நிருவாக நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1982 இன் 09 ஆம் இலக்க இலங்கை அபிவருத்தி நிருவாக நிறுவன அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கை நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு 2018 யூலை 31 ஆந் திகதி வழங்கப்பட்டது.

1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து இலங்கை அபிவருத்தி நிருவாக நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 01

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நியமத்தின் 48 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது வருமானங்களையும் செலவுகளையும் ஒன்றுக்கொன்று எதிரீடு செய்ய முடியாது என்ற போதிலும் ஏனைய பெறவேண்டிய மீதிகளிலிருந்து ரூபா 113,645 தொகையான செலுத்த வேண்டிய மீதிகள் எதிரீடு செய்யப்பட்டு காட்டப்பட்டிருந்தது.

(ii) முன் எச்சரிக்கை கருதுகோள் மற்றும் இணைத்தல் கருதுகோள்களுக்கு இணங்கிய வகையில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக UNDP செயற்திட்டத்தால் நன்கொடையாக

வழங்கப்பட்ட ரூபா 3,871,700 தொகையான கட்டிடத்தின் பெறுமதி அதன் மூலதனத் தன்மையை கருத்திற்கொள்ளாது ஒரு வருமானமாக நிதி செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) **இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 07**

நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையற்ற சொத்துக்களுக்கான வினைத்திறனான ஆயுட்காலத்தை மீளாய்வு செய்யாததன் காரணமாக ரூபா 150,288,622 கிரயமான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு காணப்பட்டன. அதற்கிணங்க மதிப்பீட்டுத் தவறை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூலதன மானிய முறைமையை கணிக்கும் போது ரூபா 174,789 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டின் போது ரூபா 3,000,000 தொகையான மீண்டுவரும் மானியம் மூலதன மானியமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அப்பிழையை சரி செய்வதற்காக மீளாய்வாண்டின் போது நிறுத்தி வைக்கப்பட்ட இலாபக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு மீண்டும் மூலதன மானியம் ரூபா 3,000,000 ஆல் செலவு வைத்ததன் காரணமாக மூலதன மானியம் ரூபா 6,000,000 ஆல் அதிகரித்தும் நிறுத்திவைக்கப்பட்ட இலாபக் கணக்கு அத்தொகையால் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது.

(இ) மேற்கூறிய நிலையான சொத்துக்களுக்குரிய பெறுமானத்தேய்வை கணிப்பீடு செய்யும் போது 03 வகையான சொத்துக்களுக்காக ரூபா 2,254,492 மிகையாக கணிப்பீடு செய்தும் 04 வகையான சொத்துக்களுக்காக ரூபா 534,364 குறைத்து கணிப்பீடு செய்தும் காட்டப்பட்டதன் காரணமாக ஆண்டிற்கான பெறுமானத்தேய்வுப் பெறுமதி ரூபா 1,720,128 ஆல் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது.

2.2.3 **விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்**

நிலையான சொத்துக்கள் கிரயத்தை பேரேட்டு கணக்கு மீதி மற்றும் துணைப் பதிவேடுகளின் மீதிகளுடன் ஒப்பிடும் போது 04 விடயங்களின் பெறுமதி ரூபா 3,627,594 ஆல் குறைத்தும் 03 விடயங்களின் பெறுமதி ரூபா 11,275,516 ஆல் அதிகரித்தும் காட்டப்பட்டதன் காரணமாக சொத்துக்களின் மீதிகளில் ரூபா 7,647,922 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

2.3 **பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஏனைய பெறவேண்டிய மீதிகளில் 03 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்குமிடைப்பட்ட காலமாக பெறவேண்டிய மீதி ரூபா 9,128,734 ஆக இருந்ததுடன் 05 ஆண்டுகளுக்கு மிகையான மீதி ரூபா 388,141 ஆகும்.

(ஆ) ஆலோசனை மற்றும் தமிழ் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக கிடைத்த கட்டணங்களிலிருந்து 03 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்தின் போது மீளச்செலுத்த வேண்டியிருந்த மீதி ரூபா 4,078,317 ஆக இருந்ததுடன் 05 ஆண்டுகளை மிகைத்த மீதி ரூபா 3,121,970 ஆகும்.

2.4 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு	இணக்கமின்மை
(அ)	2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 114 ஆம்	உழைக்கும் போதே செலுத்தும் வரி, உரிய மாதத்தின் பின்னர் வரும் மாதத்தின் 15 ஆம்

	பிரிவு	திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டின் 08 மாதங்களுக்காக அறவிடப்பட்ட ரூபா 598,734 தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி 2018 ஆம் ஆண்டின் முதல் 02 மாதங்களின் போதே அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.
(ஆ)	**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்**	
	நிதிப்பிரமாணங்கள் 571	இரண்டு ஆண்டுகளை மிகைத்த நிறுத்திவைக்கப்பட்ட வைப்புக்களின் ரூபா 2,283,525 தொகையான மீதி சம்பந்தமாக பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(இ)	2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதி கூற்றறிக்கை	2017 ஆம் ஆண்டிற்கான பொருள் மீளாய்வு அறிக்கையை உரிய காலப்பகுதிக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கும் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் கணக்காய்வுத் திகதியான 2018 செப்தெம்பர் 04 ஆந் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
(ஈ)	1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை	ரூபா 45,771,495 பெறுமதியான நிலையான சொத்துக்கள் சம்பந்தமாக நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவிலலை.
(உ)	2015 மே 15 ஆந் திகதிய 1/2015/01 ஆம் இலக்க நிதி அமைச்சு சுற்றறிக்கையின் 6(அ)(2) ஆம் பிரிவு	ஒரு நாள் சேவையின் மூலம் வெளிநாட்டுப் பயண அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளும் போது சாதாரண அனுமதிப்பத்திரக் கட்டணம் மாத்திரம் மீளளிப்புச் செய்யப்பட

	வேண்டிய போதிலும் இந்த ஒழுங்கு விதிகளுக்கு இணக்கமின்றி ஒரு நாள் சேவையின் முழுக் கட்டணமாகிய ரூபா 10,000 மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது.
(ஊ) 2007- மதியுரையாளர்களைத் தெரிவு செய்தல் மற்றும் சேவையில் ஈடுபடுத்துதல் வழிகாட்டிக் கோவையின் 4.4 ஆம் வழிகாட்டி	பொறியியல் மதியுரையாளர்களைத் தெரிவு செய்து நியமிக்கும் போது அமைச்சிலுள்ள பொறியியல் பிரிவில் பொறியியலாளர் ஒருவர் இருக்கும் போது அவரின் சேவையைப் பெற்றுக்கொள்ளாது உணவுச்சாலையின் புதிய கட்டிடத்திற்கான மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்கும் ஏனைய சேவைகளுக்காகவும் ஏனைய அரசாங்க நிறுவனங்களின் சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட்டு பொறியியலாளர் மதியுரைக் கட்டணமாக ரூபா 110,098 செலுத்தப்பட்டிருந்தது.
(எ) **பெறுகை வழிகாட்டிக் கோவை – 2006**	
(i) வழிகாட்டி 3.4(எ)	வேலைகளுக்கான சந்தை விலை கோருதல் முறைமையை ஈடுபடுத்தும் போது நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவுசெய்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மாத்திரம் விலை மனுக்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் ரூபா 7,413,773 பெறுமதியான உணவுச்சாலை புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக விலை மனுக்கள் கோரப்பட்ட 05 நிறுவனங்களில் ஒரு நிறுவனம் மாத்திரம் CIDA பதிவினைப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், பெற்றுக்கொள்ளப்பட்ட 05 விலை மனுக்களில் 04 விலை மனுக்கள் மாத்திரம் பொறியிடப்பட்டு அனுப்பப்பட்டிருந்ததனால் வழிகாட்டிகளுக்கு முரணாக இருந்தன. என்பது அவதானிக்கப்பட்டது.

(ii)	வழிகாட்டி 2.14.1	பொறிசெய்யப்பட்ட விலை மனுக்களைக் கோராது அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபனத்திடமிருந்து வர்ண புகைப்படப் பிரதி இயந்திரமும் லேசர் அச்சு இயந்திரமும் முறையே ரூபா 529,000 மற்றும் ரூபா 50,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலும் விடுதியை புனரமைப்புச் செய்வதற்காக ரூபா 891,018 பெறுமதியான கட்டிடப் பொருட்கள் நேரடியாக கூட்டுத்தாபனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டன.
(iii)	வழிகாட்டி 5.3.3	விலை மனுக்களை அழைப்பதற்காக உள்ளடக்கப்பட வேண்டிய பொது அறிவுறுத்தல்களின் கீழ் விலை மனுக்களைத் திறக்கும் நடைமுறை தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் உணவுச்சாலைக்கான புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான விலைமனுக் கோரலுக்கான அழைப்பில் அத்தகவல்கள் உள்ளடக்கப்படாதததன் காரணமாக எந்த விலை மனுதாரரும் விலை மனுவைத் திறக்கும் சந்தர்ப்பத்திற்காக பங்குபற்றியிருக்கவில்லை.

2.5 போதிய அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டிலிருந்து ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக பெற்றுக் கொண்டு எஞ்சியுள்ள ஆனால் மீளச்செலுத்த வேண்டிய பணத்தில் ரூபா 290,700 தொகை மீள வேண்டப்படுவதில்லை என்பது நிலையாக உறுதிப்படுத்தப்படாது மீளாய்வாண்டின் போது வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது.

(ஆ) "நிறுவனத்தின் நிறுவக இயலளவை அதிகரித்தல்" என்ற தலைப்பில் 2013 பெப்ரவரி 14 ஆந் திகதி சமர்ப்பித்த அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக 2013 ஏப்ரல் 19 ஆந் திகதிய அப/13/0237/523/011 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் மூன்றாம் நிலைப்படுத்தப்பட்ட "கல்விசார் பதவியணியினருக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படும் வகையில் மூன்றாம் நிலைப் படிகளை அடிப்படைச் சம்பளத்தில் 50 சதவீதம் வரை அதிகரிப்பதற்காக" அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தால் "நிறுவனத்தின் மூன்றாம் நிலை அடிப்படையில் சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்து பதவிநிலை உத்தியோகத்தர்களும் கல்விசார் கடமைகளை நிறைவேற்றுகின்றார்கள் எனக் கூறி அமைச்சு செயலாளருக்கு விடுத்த வேண்டுதல்களுக்கு கிடைத்த அங்கீகாரம் மற்றும் நிருவாக சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது அடிப்படையில் சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்து கல்விசார் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கும் செலுத்த வேண்டிய 25 சதவீதமான படியை 50 சதவீதமாக செலுத்தியதன் காரணமாக 2014 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை ரூபா 2,688,162 தொகையான படி மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவத்தின் நிதி விளைவுகள் ரூபா 16,040,654 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 74,075,222 ஆக இருந்ததனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 58,034,568 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக செலவு செய்யப்பட்ட பணம் ரூபா 46,413,155 ஆல் அதிகரித்தல் மற்றும் ரூபா 11,736,078 தொகையான பெறவேண்டிய மீதியை பதிவழித்தல் நிதி விளைவுகளின் குறைவுக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளுக்கான நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 32,251,344 தொகையான

பற்றாக்குறை 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 34,195,260 வரை அதிகரித்திருந்தது எவ்வாறாயினும் 2016 ஆம் ஆண்டின் போது நிதி விளைவுகள் ரூபா 74,075,222 மிகையாக மாற்றமடைந்திருந்தும் 2017 ஆம் ஆண்டின் போது அந்த மிகை மீண்டும் ரூபா 16,040,653 வரை குறைவடைந்திருந்தது. ஊழியர் ஊதியங்கள் நடைமுறையற்ற சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீண்டும் செம்மையாக்கியதன் பின்னர் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 58,984,596 தொகையான பங்களிப்பு 2016 ஆம் ஆண்டளவில் ரூபா 205,265,825 வரை தொடர்ச்சியாக முன்னேற்றமடைந்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது ரூபா 154,297,600 வரை வீழ்ச்சியடைந்து செல்வதனை சுட்டிக்காட்டியது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டில் செயல்நடவடிக்கைத் திட்டமானது இரண்டு சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டிருந்ததுடன் தொடக்க செயல்நடவடிக்கைத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வேறுபாடுகளுக்காக இயக்குனர் சபை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமானது நிறுவனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காகத் தயாரிக்கப்படுகின்ற போதிலும் எதிர்பார்க்கப்பட்ட புள்ளிவிபர ரீதியான பெறுமதி காட்டப்பட்டிருக்கவில்லை. மேலும், செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 04 பிரிவுகள் சம்பந்தமான செயல் முன்னேற்றமும் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட செயல்முன்னேற்ற அறிக்கையில் மூலதனச் செலவுகளின் நிதி செயல் முன்னேற்றம் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் நிறுவனத்தின் குறிக்கோள்களின் பௌதீக செயல் முன்னேற்றத்தை வெளிப்படுத்தும் வகையில் செயல் முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4.2 சச்சரவுத்தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

2008 ஏப்ரல் 24 ஆந் திகதிய 431 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் "வெளிநாடு செல்லும் அனைத்து அரசாங்க உத்தியோகத்தர்களும் சிறீலங்கன் எயார் லைன்ஸ் கம்பனியிடமிருந்து மாத்திரம் விமான பயணச் சேவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். கம்பனி விமானப் பயணச் சேவைகளை வழங்காத பயணத்திற்காக மாத்திரம் உரிய வரிசை அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தின் கீழ் ஏனைய விமானச் சேவைக் கம்பனிகளின் மூலம் வசதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்" எனினும் விமான பயணத்திற்கான விமான டிக்கட்டுக்களுக்கு 03 முகவர் நிறுவனங்கள் சிறீலங்கன் விமானக் கம்பனியின் விலை மனுக்களைச் சமர்ப்பித்திருந்தும் சீனாவில் நடைபெற்ற பயிச்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 29 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 2,030,000 தொகையான மற்றும் ஐக்கிய இராச்சியத்தில் நடைபெற்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 13 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 2,079,350 தொகையான விமான டிக்கட்டுக்கள் வெளிநாட்டு பயண கம்பனிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டதன் காரணமாக சிறீலங்கன் எயார் லைன்ஸ் கம்பனிக்கு கிடைக்க வேண்டியிருந்த ரூபா 4,109,350 தொகை ஏனைய வெளிநாட்டு விமானக் கம்பனிகளுக்கு செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

4.3 வெளிப்படையான ஒழுங்கீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது சுற்றுலா விடுதியை ஒதுக்கீடு செய்வதற்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட பணத்தில் நிறுவனத்தின் வங்கி கணக்கில் செலவு வைக்கப்படவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட பெறுமதி ரூபா 262,100 ஆகும்.

(ஆ) நிறுவனத்தின் மாணவர்கள் ஆக அகில இலங்கை சேவையைச் சார்ந்த உத்தியோகத்தாகள் மற்றும் பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களைச் சார்ந்த உத்தியோகத்தர்கள் பயிற்சிக்காக வெளிநாட்டிற்குச் சென்ற சந்தர்ப்பங்களில் நிறுவனத்திலிருந்து பங்குபற்றிய ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் பயிற்சிக்குழுவுடன் நிரந்தரமாக இருக்க வேண்டியதுடன் பயிற்சி குழுவுடன் தங்குமிடம் மற்றும் ஏனைய வசதிகளைப் பெற்றுக்கொள்ளாது அதற்கு புறம்பாக தங்குமிட வசதிகள் பெற்றுக்கொண்டிருந்தமை கணக்காய்வில்

அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் அவர்கள் பயிற்சிக் குழுவின் உத்தியோகத்தர்களாகக் கருதி அச்செலவுகளும் பயிற்சிக் குழுவின் செலவுகளாக உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2015 மே 15 ஆந் திகதிய 01/2015/01 ஆம் இலக்க நிதி அமைச்சு சுற்றறிக்கையின் 04(அ) பந்தியிலுள்ள ஒழுங்கு விதிகளுக்கு முரணாக நிறுவனத்தின் 18 உத்தியோகத்தர்களுக்கு கூட்டிணைந்த படி அண்ணளவாக ரூபா 7,006,850 தொகை ஏனைய உத்தியோகத்தர்களை விட மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

4.4 ஆளணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 165 ஆக இருந்தும் அவற்றில் 56 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டது. நிறுவனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குரிய நிலையான செயற்பாடுகளுக்காகவே ஆளணி தோற்றுவிக்கப்பட்டிருந்தனால் அங்கீகரிக்கப்பட்ட 46 பதவிநிலைப் பதவிகளில் 25 பதவிகளும் பதவிநிலையற்ற 24 பதவிகளில் 13 பதவிகளும் ஆக அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவான வெற்றிடங்கள் காணப்பட்டமை நிறுவனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவது தொடர்பாக பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) உள்ளபடியான பதவியணியினரில் அகில இலங்கை அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பதவி நிலை உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 11 ஆக இருந்ததுடன் பதவிநிலையற்ற மற்றும் ஏனைய ஆளணியினர் 08 ஆகும்.

5. நிலைபேறான அபிவிருத்தி

5.1 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் மீளாய்வாண்டு தொடர்பாக இலங்கை அபிவிருத்தி

நிருவாக நிறுவனத்தினால் தமது நோக்கெல்லையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

இது சம்பந்தமாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரல் தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டிருந்தும் அச்செயற்பாடு சம்பந்தமான நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களுக்கான இலக்குகளும் இந்த இலக்குகளை அடைந்து கொள்ள வேண்டிய மையப் புள்ளிகளும் இலக்குகளின் அடிப்படையில் அடைந்து கொள்ளலினை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரல் தொடர்பாக தெளிவுபடுத்தலின் அடிப்படையில் நிறுவனத்தினால் தனது நோக்கெல்லையின் பிரகாரம் அடைந்து கொள்ள வேண்டிய 04 குறிக்கோள்கள் இனங்காணப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் அனைத்துக்காகவும் மேற்கொள்ளக்கூடிய நிலைபேறான மற்றும் நவீன மின்வலு வழங்கலினை சான்றுபடுத்துவதற்கான செயல்முன்னேற்றத்தை அளவீடு செய்யும் குறிகாட்டியாக மின்சாரப் பட்டியலை 30 சதவீதத்தால் குறைப்பதனைத் தவிர்த்து ஏனைய குறிக்கோள்களுக்கான இலக்குகள், குறிகாட்டிகள் அடைய வேண்டிய நிலைகள் என்பவற்றை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஏதாவது நடவடிக்கையின் சரியான செயலாற்றலை அளவீடு செய்வதற்காக சரியான புள்ளிவிபர அடிப்படை காணப்படுதல் அத்தியாவசியமனதாக இருந்த போதிலும் நிறுவனத்தினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதனை அளவீடு செய்வதற்காக சரியான புள்ளிவிபர அடிப்படையினை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிலைபேறான இலக்குகளை அடைந்து கொள்வதற்காக நிறுவனத்தினால் இனங்காணப்பட்ட செயற்பாடுகளை நிறுவனத்தின் மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் அச்செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் வருடாந்த பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு ஆயத்தமாகும் போது அனைத்திற்காகவும் மேற்கொள்ளக்கூடிய நம்பகத்தன்மையான நிலைபேறான மற்றும் நவீன மின்வலு வழங்கலின் சான்றுபடுத்துதலினைத் தவிர்த்து ஏனைய நிறுவனங்களுடன் சிறந்த தொடர்புகளை வைத்திருக்காததன் காரணமாக இலக்கிடப்பட்ட குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் முன் ஆயத்தம் செய்யும் நடவடிக்கை மிகவும் மெதுவான நிலைமையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

6.1 பெறுகைகளும் ஒப்பந்த நடைமுறைகளும்

பெறுகைத் திட்டத்தின் செயல் முன்னேற்றத்தை பரீட்ச்சித்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் உணவுச்சாலையின் இரண்டாம் கட்டம், உத்தியோகபூர்வ இல்லக் கட்டிடத்தை திருத்தம் செய்தல் வாகனங்களைப் பழுதுபார்த்தல் என்பவற்றின் பௌதீக செயல் முன்னேற்றம் முறையே 25 சதவீதம் 35 சதவீதம் மற்றும் 85 சதவீதமாக இருந்த போதிலும் அவற்றின் நிதி செயல்முன்னேற்றம் 45 சதவீதம், 51 சதவீதம் மற்றும் 65 சதவீதமாக இருந்தன.

(ஆ) நிறுவனத்தினால் கேள்வி அறிக்கைப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

6.2 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2016/2017 ஆண்டிற்காக நிறுவனத்தின் உணவுச்சாலையை செயற்படுத்துவதற்காக 2016 ஆம் ஆண்டின் போது வழங்குனரை தெரிவு செய்தல் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசின் பிரகாரம் விலை மனுவை கொள்வனவு செய்த நிறுவனம் நிபந்தனைகளுடன் விலைமனுவை

சமர்ப்பித்திருந்ததாகக் காட்டப்பட்டிருந்தும் அந்த நிறுவனம் முறைப்படியாக விபரங்களை சமர்ப்பித்திருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ii) நிறுவன பதவியணி 109 உத்தியோகத்தர்களை உள்ளடக்கியிருந்ததுடன் அவர்களில் 20 இற்கும் 30 இற்கும் இடைப்பட்ட உத்தியோகத்தர்கள் மாத்திரம் உணவுச்சாலையில் உணவை கொள்வனவு செய்வதுடன் பெரும் பாலானவர்கள் நிறுவனத்தில் பயிற்சி பெறுபவர்களும் கற்கைநெறிகளை பயிலுபவர்களுமாவார்கள் பெறுகை மதிப்பீட்டின் போது நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் வெளி உத்தியோகத்தர்கள் ஆகிய இரண்டு தொகுதிகளுக்காகவும் சமர்ப்பித்த உணவு விலைகள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் உணவுச்சாலையை நடாத்துவதன் பிரதான குறிக்கோள் நலன்புரியை நிறைவேற்றுவதாகக் காட்டி சிற்றுண்டிகளுக்கு குறைந்த விலையைச் சமர்ப்பித்த ஆனால் காலை மற்றும் பகல் உணவுக்காக அதிக விலைகளைச் சமர்ப்பித்த நிறுவனத்திற்கு பெறுகை வழங்கப்பட்டிருந்தது.

(iii) வழங்குனராகத் தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களில் வழங்கப்படுகின்ற சிற்றுண்டிகள் தொடர்பான விடயங்களுக்கான உணவு வகைகள் எவை என்பது குறிப்பிடப்படாது இருந்தமை சம்பந்தமாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(iv) உணவுச் சாலையை நடாத்துவதற்காக தொழில்நுட்ப உபகரணங்கள் (மனைப் பொருட்களைத் தவிர்த்து) நிறுவனத்தினால் வழங்கப்படுவதாக பெறுகை ஆவனங்களின் மூலம் கேள்விதாரருக்கு தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) இப்பெறுகையின் போது கேள்விதாரரின் விலையை குறைப்பதற்கு கலந்துரையாடுவதற்காக தொழில்நுட்ப மற்றும் பெறுகைக் குழுவின் அங்கத்தவர் அல்லாத உத்தியோகத்தரான பணிப்பாளர் (நிர்வாகம்) அதிகாரம் ஒப்படைக்கப்படாது பங்குபற்றியிருந்தார்

6.3 பாதீட்டு கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீசுடீ/12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.4 ஆம பந்தியின் பிரகாரம் வரைபு பாதீடானது

கணக்காண்டு ஆரம்பிப்பதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான பாதீடு 2016 நவம்பர் 30 ஆந் திகதியே பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதியே பீஈ/12 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிகையின் 4.2.2 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த பாதீடு பணிப்பாளர் சபையால் உரிய காலத்தில் மீளாய்வு செய்யப்பட்டு தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டிற்கான வெளிநாட்டு பயணச் செலவுகள் ரூபா 8.5 மில்லியனாக இருந்த போதிலும் இயக்குனர் சபையினால் ரூபா 5.5 மில்லியன் மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட செலவுகளையும் உள்ளபடியான செலவுகளையும் ஒப்பிடும் போது 07 செலவு விடயங்களில் 08 சதவீதத்தலிருந்து 100 சதவீதம் வரையான சேமிப்பும் மேலும் ஒரு செலவு விடயத்திற்கான செலவுகள் 108 சதவீதத்தால் மிகைத்துச் சென்றிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. பாதீடு செய்யப்பட்ட வருமானத்தை உள்ளபடியான வருமானத்துடன் ஒப்பீடு செய்த போது 03 விடயங்களில் 40 சதவீத்திலிருந்து 70 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டதனால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. என்பது அவதானிக்கப்பட்டது.

6.4 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வு பந்திகள்

நிறுவனத்தினால் பேணப்பட்டு வந்த இரண்டு வங்கி கணக்குகளின் மீதிகளை பகுப்பாய்வு செய்த போது ஆண்டு முழுவதும் நாளாந்தம் சராசரியாக ரூபா 5,000,000 இற்கு அண்மித்த மீதி பேணப்பட்டு வந்தமை அவதானிக்கப்பட்டதுடன் நடைமுறைக் கணக்குகளில் அதிகளவான பணத்தை நிறுத்தி வைத்திருப்பதனை விட கோரும் போது செலுத்தப்படுகின்ற வைப்புக்களில் (Call Deposits) பணத்தை முதலீடு செய்வதன் மூலம் வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இருந்த சந்தர்ப்பம் தொடர்பாக புத்திசாதுரியமானதாக கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவிலலை.

7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

	முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள்	அவதானிப்பு
(அ)	வாயில் கதவு உத்தரவுப் பத்திரத்தை பேணுதல்	பிரதான வாயில் கதவினூடாக பிரயாணம் செய்யும் வாகனங்கள தொடர்பாக வாயில் கதவு புத்தகத்தில் பதிவு செய்யப்படாமை
(ஆ)	சுற்றுலா விடுதியை ஒதுக்கீடு செய்தல்	சுற்றுலா விடுதியை ஒதுக்கீடு செய்யும் நடவடிக்கை தொடர்பாக பின் தொடர் நடவடிக்கை எடுக்கப்படாமை
(இ)	கடன்பட்டோரும் கடன் தொடுத்தோரும்	மீதிகளின் உறுதிப்படுத்தலைப் பெற்றுக்கொண்டு அம்மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை
(ஈ)	பெறுகைக் கோவைகள் பேணப்படுதல்	
		(i) பெறுகை கோவைகளில் உள்ளடக்கப்பட வேண்டிய கடிதங்கள் உள்ளடக்கப்படாமை உதாரணமாக: வேலைத்தளத்தை ஒப்படைத்தல் அல்லது மீளப்பெற்றுக் கொள்ளும் கடிதம் உள்ளடக்கப்பட்டிருக்கவிலலை.
		(ii) உணவுச்சாலை கட்டிட ஒப்பந்தத்தின் அங்கீகரிக்கப்பட்ட பெறுகை நடைமுறை எவை என்பது குறிப்பிடப்பட்டிருக்காமை.

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
K/Y

SLIDA